
www.padippakam.com

# கலை விளக்கு

தீபம்-9

புரட்டாதி
+
ஐப்பசி-91



- 90 பெனிக் -



மேல் நாட்டுச்சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்தம் மனைகளில் சுடர்விட்டு ஒளிரட்டும் இக் கலை விளக்கு

ஆசிரியர் : எஸ்.பி. நாதன்

KAMENER STR, 28, 4600, DORTMUND

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# எம் மனதில் உதிப்பவை....

அருமை வாசகர்களே! இக்கவி விளக்கு சுடர் விட்டு உங்கள் முன் பிரகாசிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நமது தாய்நாட்டுப் பிரச்சினைத் தீர்வு பற்றி நாம் யாவரும் அறிந்ததே. இன்று இலங்கையில் வாழும் தமிழ்மக்கள் உயிர்ப்பாதுகாப்புடன் வாழ்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது போராட்ட வீரர்கள் பலர் உயிர்த்தியாகம் செய்து இச்சுதந்திரத்திற்காகப் பாடுபட்டார்கள். அவர்களை ஈழச்சரித்திர வரலாறு என்றும் நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கும். இந்த தியாகிகளின் ஆன்மாக்கள் தமிழ் ஈழத்தில் இராகம் பாடிக்கொண்டிருக்கின்றன. இறைவன் எங்கு இருக்கின்றான்? என்று எம்மனதில் கேள்விகள் எழுந்தன. எம்மக்களின் இருப்புக்கு இன்று தான் இறைவன் முற்றுப்புள்ளியைக் கொடுத்து நான் இருக்கின்றேன் என நிரூபித்துள்ளான் போலும்.

தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், என யாவரையும் விட்டு அகதிகளாக விரக்தியுடன் இங்கு வாழ்ந்தவர்கள் இன்று தாய்நாடு திரும்பப்போகின்றோம் என்ற மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். சிலர் தாய்நாடு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

www.padippakam.com

மற்றும் சிலர் தாய்நாடு போகப் போகின்றோம். பணத்துடன் செல்ல வேண்டுமே என வேலை தேடி ஆலாய்ப் பறக்கின்றனர். இன்னும் சிலர் பொருட்களை வாங்கி பார்சல் கட்டுகின்றனர். இப்படிப் பல ரகங்கள். எப்படியிருப்பினும் மொத்தத்தில் பிரச்சினை தீர்வைப் பெற்றது மிக்க மகிழ்ச்சியே.

எந்த ஒரு வேலையும் இன்றி, எதிர்காலத் திட்டமின்றி இங்கு வாழ்ந்த இளைஞர்கள் தாய் நாடு சென்று கல்வியைக் கற்பதா? என்ன தொழில் செய்வது? இது சம்பந்தமான பிரச்சினைகள் எழுகின்றன. இங்கு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களின் நிலை பிரச்சினைக்குரியதாகத்தான் இருக்கின்றது. சில வேளைகளில் இவர்களுக்கு இங்குள்ள அரசாங்கம் சில சலுகைகளைச் செய்யலாம் என்ற அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

இளைஞர்கள் பலர் எதிர்காலத்தில் என்ன செய்வது? என்பதை இப்போது தான் யோசிக்கிறது. இங்கு கற்றவை, சேகரித்தவை, என்பவற்றைக் கொண்டு திட்டங்கள் தீட்டி நாட்டை வளம் பெறச் செய்வார்களா? இதுவரை காலமும் இங்குள்ள மக்களின் மேல் தாங்கிப்பிடித்துப் போய் இருந்தது. எந்தத் தாய் நாட்டில் இத்தகைய பிரச்சினைகள் இன்றி வாழப் போகும் காலகட்டம் நெருங்கி விட்டது.

ஐரோப்பிய நாடுகளில் இதுவரைகாலமும் மக்களுக்கு என சிந்தனை, அறிவு, இலக்கியம், இலக்கணம், செய்திகள், புகட்டும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளியிட்ட யாவருக்கும் நன்றி கூறுவோம்.

www.padippakam.com

நடந்த காலங்களில் இக்கலைவிளக்கு சஞ்சிகையில் பொது அறிவுப் போட்டி, சொக்க கைசித்திரப் போட்டி, நடாத்திப் பரிசளித்து வந்தோம். போட்டிகளில் பங்குபற்றிய வாசகர்களுக்கும், சிறுவர்களுக்கும் எமது நன்றிகள். பரிசுப் பொருட்களை அன்பளிப்புச் செய்த திருமாலன் அவர்களுக்கு கலைவிளக்கு சார்பாகவும் உங்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். தற்போதுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகள், காலநேர நெருக்கடிகள் போன்றவை காரணமாக இப்போட்டிகளை நிறுத்த வேண்டியுள்ளது.

நம் நாட்டுப் பிரச்சினை தீர்வு பெற்ற மகிழ்ச்சியோ என்னவோ? வாசகர்களிடமிருந்து வந்த இலக்கிய ஆக்கங்கள் மிகக் குறைவே. அதற்காக நாமும் மனம் வருந்துகின்றோம்.

இலக்கிய ஆர்வலர்களே! உங்கள் சிந்தனையில் எழுந்த ஆக்கங்களை எழுதியனுப்புங்கள். மற்றவர்களும் சிந்திக்க உதவி செய்யுங்கள். உங்கள் ஆதரவில் தான் கலைவிளக்கின் வளர்ச்சியுண்டு.

பொதுமக்களுக்கு சேவை செய்து வரும் திருமதி M. HAARMANN [CARITAS OF DORTMUND] அவர்களுக்கு டோட்மண்ட் வாழ் தமிழ்மக்களாகிய நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் இக்கலைவிளக்கு சஞ்சிகை உருவாக்கத்துக்கும் இவர் முன்னின்று உழைக்கின்றார். இவருக்கும், திருமதி KALFHVES [CARITAS OF LÜNEN] அவர்களுக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

www.padippakam.com

# மகாத்மாக் காந்தி

இந்தியாவில் உள்ள போர்பந்தர் என்னும் கிராமத்திலே கரம்சந் காந்தி அவர்களுக்கும், புத்லிபாய் அம்மையாருக்கும் இளைய மகனாக 1869ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி பிறந்தார்.

1888ம் ஆண்டு லண்டன் சர்வ கலாசாலைக்குச் செல்லும் அனுமதி காந்திக்குக் கிடைத்தது. கலாசாலைக்குப் போவதற்கு முன்னர் அவருடைய தாயார் மகனை நோக்கி மது, மாது, மாமிசம், என்பவற்றைத் தொடக்கூடாது என சத்தியம் வாங்கி அனுப்பி வைத்தாள்.

லண்டனில் காந்தி கற்று வரமுன்பாக சில மாதங்களில் நோய்வாய்ப்பட்டார். இதையறிந்த அவரது உயிர் நண்பனான ஆங்கிலேயர் ஒருவர் அவரை மாமிசம் உண்ணும்படி வற்புறுத்தினார். காந்தி தாயாரின் சத்தியத்தை எடுத்துக்காட்டி மறுத்துவிட்டார். இந்தியாவிற்குச் சென்றால் மாமிசம் புசிக்காது விடலாம். இங்கு கட்டாயம் உண்ணவேண்டும் என அன்புக் கட்டளையிட்டார். அதையும் காந்தி ஏற்றுக் கொள்ளவில்லை. படிப்பை முடித்துக் கொண்டு தாய்நாடு சென்றபோது தாய் வாக்கைக் காப்பாற்றிய தனயனைக் காணாது தாயார் இறைபதம் அடைந்து விட்டார்.

உலகம் போற்றும் உத்தமராக, மகாத்மாவாக, வாழ்ந்த, இவர் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக

தொடர் ... 41ம் பக்கம்

# பரபரப்பு

— உருவகம் —

பிரமாண்டமான கட்டிடங்களைக் கொண்ட வியாபார ஸ்தாபனமாகிய KARSTADT அன்று பெரும் ஆரவாரத்துடன் திறக்கப்பட்டது. உனக்கு நான் சளைத்தவன் அல்ல என்பதை நிரூபிப்பது போல் ஒன்றுமில்லாத வகையில் தனது வியாபாரம் ஏற்படுத் தொடங்கியது, இன்னொரு நிறுவனமான C&A,

பெருமிதத்துடன் வானளாவ உயர்ந்து நின்ற C&A தனது நண்பனை KARSTADT ஐப்பார்த்து, என்ன இன்று சனிக்கிழமை இவ்வளவு மக்கள் திரள் திரளா வந்து கொண்டிருக்கின்றார்கள். மலிவு விற்பனை என்றவுடனேயே சனங்கள், படுகின்றபாடு என இளக்காரஞ் சிரித்துக் கொண்டனர். அப்போது Karstadt, உண்மைதான். மலிவு விற்பனை என்று போட்டு விட்டால், இந்த மக்களுக்குக் கொண்டாட்டம். ஒரே கூட்டமாகக் கூடிவிடுவார்கள். அதுவும் மாதம் பிறந்து முதற்சனி, என்றால் அப்பப்பா போதும் என்றாகிவிடும் என்று சலித்துக் கொண்டது. அதற்கொன்றும் ஆகத்தேவையில்லை, இங்கே அகதிகளாக இருப்பவர்கள் பிரச்சினை படுமோசம். இப்போது நாட்டில் பிரச்சினைகள் தீர்ந்து விடவே, இவர்களை அகதிகள் நாட்டுக்கு அனுப்பப் போகிறார்கள். நாம் நாடு திரும்பியே ஆகவேண்

www.padippakam.com

டும். எப்படி? என்ன
நடக்கும்? எப்போ? என்
ற வினாக்களெல்லாம் சரிவரத்
தெரியாமல், அப்பிரியின்
பரபரப்புடன் 'மலிவு விற்
பனை" என்ற போட்டைக்
கண்டதும் பொருட்கள்
வாங்குவதற்கு வந்து நிற்
கிறார்கள். தமது தாய் நாட்
டுக்குச் செல்லும் போது இந்
தினை நல்ல பொருட்களை
வாங்கிக் கொண்டு செல்ல
வேண்டும் என்ற நோக்கு
வும், அதே வேளையில் மிக
வும் மலிவாகவும், நல்ல
பொருட்களையும் வாங்க
வேண்டும் என்ற பரபரப்பு
டன் கடை கடையாகத்
திரிகின்றனர், பாவம்!
என் தான் இம்மக்
கள் இப்படி பொருட்களுக்
கு அலைகின்றனர். பொருட்
கள் வேண்டும் தான், அதற்கு
இப்படி அலைவதா? இதைக்
கேட்ட KARSTADT, அப்படிச்
சொல்லாதே. இதெல்லாம் ஜேர்மன்
பொருட்களுக்கு ஒரு தனிமவுசு
யாதையப்பா! அப்போது C&A
என்ன? இங்கு விற்கும் பொ
ருட்கள் யாவும் ஜேர்மன் தயா
ரிப்பு இல்லையே. இப்பொருட்
களுக்கு ஒப்பான பொருட்கள்
தாய்நாட்டில் மலிவாகவும்
போக்குவரத்துச் செலவுமின்றி
வேண்டலாமே. இங்குள்ள
பொருட்களில் தைவான்,
கொங் கொங், லண்டன்,
தாய்லாந்து, போன்ற நாடு
களின் தயாரிப்பாகவே கா
ணப்படுகின்றது. இப்பொருட்
கள் இலங்கை போன்ற நாடு
களுக்கும் இறக்குமதி செய்
யப்படும் தானே, என்றது.
அதுவும் சரிதான், இருந்தா
லும் ஜேர்மனியிலிருந்து
பொருட்களை வாங்கிக் கொண்
டு சென்றால் அது ஒரு கௌ
ரவம். அத்துடன் ஊராரும்
இனத்தவரும் பொருட்களை
எதிர்பார்க்கின். ஊரார்


படிப்பகம்

www.padippakam.com

திருத்தும் படாதது வாழ்ந்து காட்ட வேண்டும். வெளிநாட்டிலிருந்து என்ன கொண்டு வந்தார்கள்? என மற்றவர்கள் சொல்லுக்கு இடமளிக்கக் கூடாது என்று இங்கிருந்தே தான் சாமான்கள் பொருட்கள் எடுத்துச் செல்கின்றார்கள்.

KARSTARDT இவை எல்லாவற்றையும் மொத்தமாகக் கொட்டிவிட்டு, போர்க்கால நாடு சீரழிந்துள்ள நேரத்தில் இந்த வீடியோ, ரீவி போன்ற பொருட்களால் என்ன செய்ய முடியும். அல்லது இந்த உடுப்புகள், பொருட்கள், மின்சார உபகரணங்கள், உதிரிப்பாகங்களை வைத்து எத்தனை நாட்களுக்கு உபயோகிப்பது? ஏதோ மிச்சம் பிடித்தோ, உழைத்தோ, பணமாகக் கொண்டு சென்றால் அது பல நோக்கிலும், பல தரணைத்திலும் பயன்படுமல்லவா? என்றது. அதற்கு C&A நீ என்னப்பா! நாடு, பயன் அபிவிருத்தி என்று சிந்திக்கின்றாய். மக்கள் நாட்டு நிலைமை சீராகிவிட்டது என்று இனி நாம் நாடு திரும்பவேண்டும் என்று பரபரப்புடன் இருக்கும் வேளையில்.. நீ ஏதோ பொருளாதாரம், நாடு, அபிவிருத்தி என்று சந்தர்ப்பம் தெரியாமல் பேசுகிறாய் என்றது.

மக்கள் எந்த நேரத்திலும் சேட் துணி நல்லது. டெனிம் சப்பாத்து நல்லதா? யன்னல் திரைச்சீலை, கிளிப்புகள், பென்சில்கள், கப்பாத்துகள், என்று இன்னோரன்ன பொருட்கள் வாங்குவதில் அவர்கள் மனம் இருக்கிறது தவிர உண்மையில் இவற்றை யோசிக்கின்றார்கள் அப்படித்தான் இப் பொருட்கள்

www.padippakam.com

எவ்வளவு காலந்தான் இப் போதுமே? இது ஒருபுறமிருக்க தியாகமும் நல்ல சிந்தனையும் நாட்டுப்பற்றும் கொண்டவர்கள் அறிந்ததை யார்தான் இப் போராட்டம் வெற்றி பெற்றிருக்கின்றது என்றது.

உண்மைதான் என்று KARSTARDT ஆமைப்போலும் போது.. திரும்பி பார்... நான் கூறிய ஆட்கள்... இப்போ என்ன வாங்கிக் கொள்கின்றார் பார். ஒரு DM க்கு ஒரு பொருள் என்று எழுதப்பட்டுள்ள இடத்தில் நிற்கிறார்கள். அவர்கள் அந்த சிறுகள் பார்! அவர்கள் கதைகளையும் உன்னிப்பாகக் கேள்!

என்னமச்சான்! 1 DM. பொருட்களின் விலை போட்டுள்ளார்கள் பென்சில், பேனா, சட்டர், நூல், மாஸ்ரிக், பேப்பர், என்று.. 150 DM க்கு எவ்வளவு பொருட்கள் வாங்கலாம். இவர்.. இவ்வளவையும் எப்படிக் கொண்டு போய்ச் சேர்ப்பது? மற்றவர்.. கப்பலில் போட்டு விட்டால் மலிவாகப் போய்ச் சேரும்.

சரி.. சரி.. இன்னுமொருவர். பழைய பொருட்கள் மார்க்கெட் பக்கம் போவோம். அங்கும் நல்ல பொருட்கள் இருக்கும். இதைவிட மலிவாக வேண்டலாம்.. என நகர்ந்து விட்டனர்.

KARSTARDT இரும்பு C & A கடைப் பார்த்து திரிந்து விட்டு, இவர்களைப் பார்த்துக் கொண்டிருக்க நமக்கு நேரமில்லை... இவர்களிந்த தினை நேரடியாகப் பார்த்திருவிட்டோம். நமக்கும் பல கடமைகள் உண்டு. அவற்றைச் செய்ய வேண்டும் என விடை பெற்றனர்.

xxxx ..முற்றும்..


படிப்பகம்

www.padippakam.com

# ஒற்றுமை.

— அம்பலவன் புவனேந்திரன் —

பொய்களையும் போலிகளையும்
நான் துயிலுரியும் போது
நீங்கள் என்னைத்
தட்டிக்கொடுத்துப் பாராட்டினீர்கள்...
இப்போது,
கொத்தி விரட்டுகிறீர்களே...
நான் வாழ்ந்தது
காக்கையின் கூட்டில்தான்
நீங்கள் என்னைக்
குயிலென்று கூறுகிறீர்களே...
கண்டிக்கப்பட வேண்டியவர்கள்
தொலைவிலிருக்கிறார்கள்...
ஏன் என்னைத்
தண்டிக்கப் பார்க்கிறீர்கள்...
நான் சிங்கமாகப் போகிறேன் — என்று
சிலர் அசிங்கமாகப் பேசினார்களாம்...
அப்படியென்றால் — நான்
எப்போதோ
சிம்மாசனம் ஏறியிருப்பேன்...
நான் கற்றது
ஒற்றுமை என்ற பாடத்தைத்தான்...
நான் கேட்பதும் கேட்டதும்
அது ஒன்றைத்தான்...




படிப்பகம்

www.padippakam.com

# பூகோளம்






**பிஜித்தீவு (FIJI)**

நிலப்பரப்பு - 7,015 (சமை)
சனத்தொகை - 607 000 (1978)
தலைநகர் - சுவா [SUVA]
மொழி - ஆங்கிலம்.

**மொரிசியஸ் [MAURITIUS]**

நிலப்பரப்பு - 809 சமை.
சனத்தொகை - 941 000. (1979)
தலைநகர் - போட்லூயிஸ் [Port Louis]
மொழி - ஆங்கிலம்.

**மாலைதீவு (MALDIVE)**

பரப்பு - 114. சமை
சனத்தொகை - 143 000. (1978)
தலைநகர் - மாலி [MALE]
மொழி - Divehi.

**பகாமா [BAHAMAS]**

நிலப்பரப்பு - 4,403 சமை
சனத்தொகை - 228,000 (1978
தலைநகர் - நாசாவ் [NASSA
மொழி - ஆங்கிலம்.

www.padippakam.com

# வள்ளுவர் காட்டும் வழி

1. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

பொருளின் அளவு அறிந்து அதற்கேற்ப வாழாதவனுடைய வாழ்க்கை இருப்பது போலத் தோன்றி இல்லாமல் மறைந்து கெட்டுவிடும்.

2. ஒல்வதறிவது அறிந்ததன் கண் தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

தனக்குப் பொருந்தும் செயலையும் அதற்காக அறிய வேண்டியவற்றையும் அறிந்து அதனிடம் நிலைத்து முயல்கின்றவர்க்கு முடியாதது ஒன்றும் இல்லை.

3. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தனியராய் உண்பது, உறுதியாக இரப்பதைவிடத் துன்பமானது.

www.padippakam.com

# அர்த்தம் தெரியவில்லை என் வாழ்வில்



என்னப்பா! உனது மகனுக்கும், மகளுக்கும் அந்தந்த வருடங்களில் திருமணத்தைச் செய்து விடுதலை பெற்று விட்டாய். உமக்கு இனி நிம்மதி தான் என்றார் கனகசபையைப் பார்த்து இரத்தினம்.

கனகசபை சோகம் பொருந்திய புன்சிரிப்புடன் சரி. சரி எனக்கென்னென்று நீர் கூறுகிறீர். ஏதோ நாம் சிறிய வயதிலிருந்து பழகியவர்கள் போல. இந்த காரியாலயத்தில் இருவரும் சந்தித்து இரண்டு மாதங்கள் தான் ஆகின்றன. எனது 25 வருட வாழ்க்கை வரலாறு உமக்குத் தெரியுமா? இங்கே என்னைப் பாரும்



படிப்பகம்

www.padippakam.com

எனக்கு இப்போது 52 வயது ஆகிறது. சின்னவயதிலிருந்து உழைத்துக் கொண்டுதான் இருக்கின்றேன். என்னும் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை. எனக்கு ஐந்து பெண் சகோதரிகள். இவர்களுடன் நானும் தம்பியுமாக ஏழு பிள்ளைகளைப் பெற்றபின் இவ்வுலகைக் கைவிட்டு மேலிடம் சென்று விட்டனர். தம்பியை நான் படிக்க வைக்கப்பட்ட கஷ்டங்கள். அப்பப்பா சகோதரிமாரை அவன் பார்ப்பான் என்று அவனது படிப்புக்கு இயன்றளவு பணத்தைச் செலவு செய்தேன். மேற்படிப்புக்கென்று லண்டனுக்குப் போனவன் தான். ஏதோ கிடைக்கும் கொஞ்சப் பணம் அனுப்பிவிட்டு லண்டனிலேயே சொந்த குடும்பமாக்கிக் கொண்டான், சம்பந்த உறவால்.

19 வயதிலே ஐந்து சகோதரிகளுக்காக உழைக்கத் தொடங்கிய நான் இன்று வரையும் உழைத்துக் கொண்டுதான் இருக்கின்றேன். நற்பண்பு கொண்ட ஒரு ஆண்கள் இப்போதுதான் உலகம் இயங்குகின்றது. எனது தங்கையில் இருவரை வயதுக்கு மீறியாம் வேண்டாம், நல்லெண்ணத்தில் பெரும் என்று திருமணம் செய்தனர். நான் செய்த புண்ணியமோ, தங்கைமார் செய்த புண்ணியமோ? தங்கைகள் அழகுக்கு குறையில்லாமல் வளர்ந்திருந்தார்கள்!. மற்றைய வேறு தி திருமணம் செய்து வைக்கப்பட்ட பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும். சீதனமற்ற பொருட்கள் பெரும் பெறுமதி வாங்குவது போல் மாப்பிள்ளைமாருக்கு கின்ன இன்னகில. எனச் சீதனம் பேசி மாப்பிள்ளைகளை வாங்கித் தங்கைமார் ஒருக்கும் கொடுத்துவிட்டேன். இருபதாக, உழைத்து அவர்களுக்க கரைசேர்த்துவிட்டு விம்மி


படிப்பகம்

www.padippakam.com

யுடன் வாழலாம்.. என்று கூறும் போது .. என் வாழ்க் கையை விட விலகிப்பார்க்க பெயரால் வாழ்ந்து கொண்டி ருந்தேன்.

ஏழையிலே உதவுகிறார் போல் வாழ்ந்து வந்த எனது மாமா திடீரென வந்து எனது கா லில் விழாத குறையாக.. தம்பி என்மகளை உன்னிடம் ஒப்படைக்க என்னிடம் வசதி யில்லை. என்னும் வருத்தம் பெருகிவிட்டது. உன்னைத் தவிர என் பெண்ணுக்கு வேறு கதி யில்லை.. என்று புலம்பிக்கொ ண்டிருந்தார். மாமாவின் ஆசை யையும், அவரின் இயலாத எனது மச்சாளின் இளமையும் சிப்ப வேண்டிய கிடைப்படாத நிர்ப்பட்டது. திருமணமாகி நாட்கள் ஏழு ஆறு கொண் டிருந்தன. எமக்கு ஆண்பிள் ளைகள் தான் பிறக்கும் என்று இருந்தோம். ஆனால் அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். இவர்களுக்குச் சீதனம் கொடுப்பதற்கு மாடு மாடாக உழைத்தேன். இரண் டு வீடு கட்டினேன். இதுவரை உள்ள எல்லாவற்றையும் சேர்த்து சீதனமாகக் கொடுத்து விட்டேன். மகிழ்ச்சி தான். ஆனால் இவர்களின் திரும ணத்திற்கு செலவான தொ கையில் இன்னும் 75,000 ரூபா கடன் கொடுக்க வேண்டும். இக்கடனை யார் அடைக்கப் போகிறார்கள். இக்கடனை அடைப்பதற்கு முன்னர் எனக்கு 65 வயது ஆகிவிடும். இதன் பின்தான் எனக்கு வாழ்க்கை என்று அமைந்தால் இதில் என்ன அர் த்தமிருக்கிறது. என்று தன்னைக் கேள்வியை எழுப்பினான்.

என் வாழ்க்கையும் இறப்பை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கின்றது. நான் பிறந்து மற்றவர்களுக்காக உழைத்து வாழ்க்கையைக்

( தொடர் - 16ம் பக்கம் - )



படிப்பகம்

www.padippakam.com

# — தங்கத் தமிழே —

**— முத்து. சொக்கன் —**

தங்கத்தமிழே தரணியெல்லாந் தவழ்ந்தவளே
மங்காப் புகழ் கொண்டு மன்னர் மடிமீது மலர்ந்தவளே.
மூவேந்தர் மடிமீது முத்தெனத் திகழ்ந்தவளே.
முச்சங்கம் தன்னில் முழுநாளும் வளர்ந்தவளே,

வள்ளுவன் உனக்களித்த திருக்குறள் புகழாகி
வாழுலகம் எல்லாம் வாழ்வதற்கோர் கதியாகி.
கம்பன் உனக்களித்த காவியத்தின் பாவாகி.
கற்றோர் உலகமெல்லாம் கரைகாணப் பெருமையாகி.

பக்திப் பாவாகி பாடிவைத்தார் நால்வருமே
பன்னிரெண்டும் திசையோடும் பார்மீதிற் படர்ந்தாய்
பாரதியும் உனைப்பாடி பலகாலம் போற்ற வைத்தான்
பாரதத்தில் உன் கொடியைப் பறக்க வைத்தான்

மூவேந்தர் உனைவளர்த்து முத்தமிழாய் வாழ்ந்தாய்
பாவேந்தர் உனைப்பாடி பாரெல்லாம் வாழ்ந்தாய்
இமயத்தில் கொடிநாட்டி அயலெல்லாம் நிறைந்தாய்
இசையாலே உனைப்பாடி இமயத்தையும் வென்றாய்.



படிப்பகம்

www.padippakam.com

நாற்பது கோடி மக்களின் நேயமாக உனை வளர்க்கி
நாடில்லை! உனக்கின்று, நலிவுற்றுப் போனதுவே
பார் உலகமெல்லாம் உன் மக்கள் பரந்து
படுகின்றார் பெருந்துன்பம் பார்க்க முடியாது

பொறுத்திருப்பாய் தமிழ்த்தாயே — இன்று
பொங்கி எழுந்து விட்டார் மறவர் கூட்டம்
ஈழமங்கே மலர்ந்திடவே இறுதிவரை போரிடுவார்
கொலுவிட்டு உனைப்போற்றி கொடிதனை ஏற்றி வைப்போம்!

oxoxoxoxoxoxoxo

14 பக்கத் தொடர் —

கழிந்தது தான் மிச்சம். ஜெனீ காதல் என்று வாழ முடியவில்லையே... இந்த நிலை எமது சமுதாயத்தில் மட்டும் தானே என்று கூறி வருத்தப்பட்டார்.

கலைச்செல்வி அவரது வாழ்க்கைச் சரித்திரத்தைக் கேட்டு வருந்தினாள். ஐரோப்பிய நாடுகளில் வாழ்பவர்களும் மானிடர்கள் தானே. தேவர்கள் அல்லவே. அங்கு இத்தனை சீதனக் கொடுமை இல்லை... நமக்கு ஏன் இந்தத் தொல்லை. இதை யார் ஏற்படுத்தியது. இறைவன் தான் இதையும் நிர்ணயித்து விட்டாரா? இவற்றுக்கு ஒரு முடிவை நாம் காணமுடியாதா? எத்தனையோ தலைவர்கள் இதை ஒழிக்க வந்து எத்தனையோ திட்டங்கள் தீட்டினர். இதைத் தொடக்கி வைத்த தலைவர் யார்? என்று இருவரும் மாறி மாறி கேட்டுக் கொண்டனர். விடை கிடைக்கக் கூடியதாக இல்லையே.

எங்கள் சமுதாயத்தில் இச்சீதனப் பிரச்சினை இருக்கும் வரை ஒரு வழியாகும் புன


படிப்பகம்

www.padippakam.com

சோர்ந்தும், நிம்மதியும்
ஏற்பட முடியாது என்று
பெருமூச்சுடன் கூறி முடித்
தாள் இரத்தினம்

எங்கள் சமுதாயம்
தானே தனக்கு போட்டுக்கொண்ட
ஒரு வேலி. பரம்பரை
பரம்பரையாக நீக்கப்படாது
மக்களை, வேலியுள் அடைத்து
கின்றது. எத்தனையோ முன்
னேற்றங்கள், விஞ்ஞான
அபிவிருத்தியின் ஏற்பட்டு
உலகத்தை நவீனமாக
மாற்றிப் பார்க்கிறார்கள்
விஞ்ஞானிகள். ஆனால்...
இந்த ஒரு சாதாரண .. அற்ப
மடையத்தை ஒழிக்க முடி
யாமலே இருப்பது தான்
வேதனையாக உள்ளது
என்றாள் கனகசபை.

என்ன நீர்.. இன்று
நீரே இதற்கு ஒரு முடிவு காணப்
போவது போல் யோசிக்கிறீர்.
அது முடியாது. பெண்ணினத்தை
எள்ளி நகையாடுவதற்கென்றே ஒரு திட்டமுறை இருக்கின்றது.
அதை நீயும் நானும் யோசித்
து என்ன பயன்? என்று
இரத்தினம் கூறிவிட்டு....
யாரை யார் குறை கூறுவது?
இதற்கும் சாட்டுவது? சீதனம்
என்ற கரு உருப்பெறுவத
ற்கு உணர்வும், உதிரமும், இல்லி
டமும் கொடுப்பதும் நமது சமு
தாயத்தினர் தானே. அப்படி
என்றால் நம் சமுதாயம் இருக்
கும் வரை அது இருக்கத்தானே
வேண்டும் என்றாள் இரத்தினம்.

இடையில் கனகசபை
குறுக்கிட்டு .. அங்கே பாரும்!
நமது குடும்பங்களைப் பாரும்.
பெண் கொடுக்கும் வீட்டினரைப்
கேளோ.. எவ்வளவு கேட்கின்
றோம் என்று அறிகிறார்கள்.
பெண் எடுக்கும் வீடு என்னி
இவ்வளவுக்கு இவ்வளவு. பெ
றும். வேறு என்ன கேட்பது..
என்று சீதனத்தை விட்டு யோசிக்
கின்றார்கள்... இப்படி இருக்கும்
போது யாரைக் குறை கூறுவது?
என்றார் லாவகமாக.

முற்றும்

படிப்பகம்

www.padippakam.com

# நாட்டு நடப்பு





ஒருவர் - என்ன அண்ணை இப்ப இலங்கைப் பிரச்சினை தீர்ந்திட்டுது. இனி என்ன வீட்ட போறது தானே.

மற்றவர் - பிரச்சினை முடிஞ்சிருக்குது. ஆனால் பணப்பிரச் சினை தான் முடியவில்லையே.

000000.

ஒருவர் - என்ன எல்லாம் பார்சல் கட்டி வைச்சிருக்கிறீர். எங்கே வெளிக்கிடப் போறீர்.

மற்றவர் - சிலோனுக்குத்தான். இப்ப எங்களை அனுப்பப் போறாங்கள்.

ஒருவர் - ஜேர்மன் அரசுக்கே, எங்களை எப்ப அனுப்புறது என்று தெரியாது. இங்கள் இட்டை மெச்சு கட்டின பாடு தான். அவங்கள் இதைக் கேள்விப் பட்டு அடுத்தமாதம் மீட்டிங்கு வைக்கப் போறாங்களாம்.

மற்றவர் — ?...? அப்பிடியா சங்கதி?

000000

தொடர் - 22ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# சமர்ப்பணம்.

— காசி —

கவலையே புரியாத கல்லூரிப் பருவம்
காண்பவை யெல்லாம் கண்ணுக்குக் குளிர்ச்சி
காதலதைக் காணத்துடிக்கும் கலியுகம்
பருவமோ பதினாறு வயதின் எல்லையிலே
வாலிபமே வா வா என வசந்தராகம் பாட,
இளமையது பொன்னூஞ்சல் ஆட,
அவள் பெயரோ கவிதா. கம்பன் பாடாத கவியோ?
இடையோ நூலிடை, இயற்கையின் பரிசோ?
மருட்டுகின்ற மான்விழியோ, தேன்குடமோ?
என்னை மயக்க வந்த மதுரசமோ
வான் வெளியில் சிறகடித்தேன்,

கண்டேன் கவிதாவை, அலைந்தேன் பலநாளாய்
காலங்கள் ஓடின கடமைகள் வந்தன.
காதலியிடம் விடை பெற்றுக் கடந்தேன்.
இந்து மா கடலைத் தான் இனிதே கடந்தேன்
மூன்று மாதங்கள் முத்தங்கள் பல பதித்து
கவிதைகள் புனைந்து கடிதங்கள் வந்தன
காரணமின்றி சிறிது காலம் கவியின்றி
பறவையர் வாழும் இப்பூமியிலே பாவையவள் என்னவானாள்?
பயங்கரவாத நோயினால் பாடையிலே எரிகின்றாள்.
கவிதா, இறந்தாலும் இவள் காதல் என்றும் வாழ்க!


படிப்பகம்

www.padippakam.com

# வழி காட்டும் மதம்

❀ பூந்தோட்டக்காரன் ஒருவன் பூச்செடிகளை வளர்த்து அழகான சிறந்த மலர்களைப் பார்த்து மனம் சந்தோஷமடைகின்றான். மற்றையோர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றான். பூச்செடிகளை நன்கு பாதுகாத்து நீரூற்றி, பசளையிட்டு வளர்க்கின்றான். செடிகளை இடையூறு கொடுத்து வரும் பூச்சிகளைக் களைவதற்கு கிளறி, கிண்டி, அவற்றையும் பண்படுத்திடுவான். இவனது செயல்கள் பூஞ்செடிகளுக்கு இடையூறு, துன்பமாக இருந்த போதிலும்.. பின்னர் நல்ல செழிப்பான, அழகான, பூக்களை அம்மரங்கள் பூக்கின்றன. இது போன்று இம்மானிட வாழ்வில் எமக்கு இறைவன் தரும் சோதனைகளும், வேதனைகளும் எமக்கு இன்பத்தைத் தருகின்றன. இதன் பின் இறைவன் எம்மைத் தன் பக்திநின்றும் ஆட்கொள்கின்றான். பூவைப் போன்ற மனம் உடையவராக இறைவன் கொடுக்கும் சோதனைகளைத் தாங்கி இறைவனிடமே அச்சுமையை ஒப்படைக்கும் மனப்பான்மையுடையவராயிருத்தல் வேண்டும்.

❀ தேனைப் பருகுவதற்கு சிறு பூச்சிகள் தேன் கூட்டை நாடிச் சென்று தேனைப் பருகுகின்றன. சில பூச்சிகள் தேனைப் பருகிவிட்டு மீண்டும் பறந்து விடுகின்



படிப்பகம்

www.padippakam.com

நன. இன்றும் சிலபூச்சிகள் தேனின் இனிமையால் கவரப்பட்டு பெரும் பொழுதும் தேனை உறிஞ்சிக் கொள்ள முனைகின்றது. அவ்வாறு இருக்கும் போது அதன் நுண்ணிய கால்கள் தேனுக்குள் அமிழ்ந்து அதற்குள்ளேயே மாண்டு விடுகின்றன.

பூச்சிகளின் செயல் போன்று மானிடர் பலர் இன்பம், இன்பம் என்று அலைந்து, அதனைப் பூர்த்தி கொள்ள முனைகின்றார்கள். மானிட வாழ்க்கைதான் இன்பமானது என தமது ஆசைகளை நிறைவேற்ற செல்லும் போது துன்பத்தில் சிக்கித் தத்தளிக்கின்றார்கள். எனவே நாம் எதிலும் நிறைவுடன் வாழப்பழக வேண்டும் பேராசை பெருநட்டம் என்பது பழமொழி.

ஒரு வரண்ட பாலைவனத்திற்கு பிரயாணிகள் செல்லும் போது அவர்களுக்குத் தாகம் எடுக்கின்றது. எதிரேயுள்ள நீர்ச்சுனைகளைக் கண்டதும் மகிழ்வுடன் நீரினைப் பருகி, சிறிது நேரம் களைப்பாறிச் செல்கின்றனர். இவ்வாறு ஆறியிருந்து.. மீண்டும் மீண்டும் பயணத்தைத் தொடங்குவார்கள். இது போன்று நாம் இவ்வுலக வாழ்க்கை எனும் பயணத்தில் போய்க் கொண்டிருக்கின்றோம். எமக்கு களைப்பு, தாகம் ஏற்படும் போது இறைவனின் ஆலயம் எனும் நீர்ச்சுனைகளில் நீரருந்தி, தங்கி, களைப்பு நீக்கிச் செல்கின்றோம்.. இவ்வாறு வாழ்க்கைப் பயணத்தினை மேற்கொண்டு இறுதி முக்தியின்பத்தைப் பெற இறைவன் எமக்கு அருள் பாலிப்பான். ஆலயங்கள் மானிட ஆன்மாக்களின் தங்குமடம் எனக் கூறப்படுகின்றது.

xxxx xxx



படிப்பகம்

ஒருவர் - என்னடாப்பா! இந்த தீ நாட்டுப் பிரச்சினை நடக்கும் போது விட்டுக்கவனத்தின் அக்கறையின்றி இருந்தாய். இப்ப நெருக்கமும் காயிதக்காரனைப் பார்த்துக் கொண்டிருக்கிறாய். என்ன விசயம்?

மற்றவர் - இங்கே கல்யாணம் (ஜேர்மனிலை) செய்தால் நாட்டுக்குப் போகத் தேவையில்லை. அதுதான் திருமணமாகாத பெட்டைகளுக்கு எழுதிப் போட்டனான் விடைக்குது. அதுதான்....

00000000000000

ஒருவர் - என்ன தம்பி! ஒரு பாக் பெட்டி, ஒரு அப்பிள் யூஸ் பெட்டியுடன் போகிறாய்? இப்பதானே சோசல் காசு எடுத்தனீர்?

மற்றவர் - போன கிழமை தான் சாமான்கள் வாங்கினனான். டமனதில் பிரச்சினை தீர்ந்து அனுப்பப் போகினம். உள்ள காசையும் செலவழிச்சிற்று என்ன செய்யிறது? அப்பிள்யூஸ் இந்த குடித்துப்போட்டு என்ன அங்கு தண்ணீரைச் சூடாக்கி குடிக்கிறதோ?

0000000

ஒருவர் - என்ன தம்பி ஒழுங்காக நேரத்துக்கு வாறாய்?

மற்றவர் - வீட்டை அம்மா இருக்கிறது தானே.. இங்க வாறன்.

ஒருவர் - (மனதுக்குள் சீட்டுக்காரரைப் பிடித்தாவது வேலை எடுத்திடலாம்) நாட்டுக்குப் போறநேரம் பக்தி வந்திருக்குதே.

000000000000

ஒருவர் - என்ன மச்சான்! விஸ்கி வாங்காமல் 3 மாதத்துக்கு வைன் வாங்கிக் கொண்டு போறாய்?

மற்றவர் - எனக்கு ஒத்து வருகுதில்லை. டொக்டரிடம் இருமலுக்கு மருந்து எடுக்கப் போனபோது டொக்டர் குடிக்க வேண்டாம் என்று சொன்னவர்.

ஒருவர் - இலங்கைப் பிரச்சினை தீர்ந்த பிறகுதானே சொல்லியிருப்பார்.. என்ன?

ஒருவர் - ?......? ....?

ல்லலலல

www.padippakam.com



# உறக்கம் கலைந்தது

அன்று உலக ரிவி(T.V) றேடியோ செய்திகளாக இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் ஒன்றை தமிழர்களின் பாதுகாப்புக் கருதி, எதிர்காலம் கருதி, செய்து கொண்டமை பரவலாகப் பரவிக் கொண்டிருந்தது. உலக நாடுகளிலுள்ள தமிழ்மக்கள் யாவரும் மிக உன்னிப்பாக T.V கேட்பதும், றேடியோவில் B.B.C நியூஸ் கேட்பதுமாக ஒரே ஆரவாரத்துடன் காணப்பட்டனர். அரசியல் பற்றிய கற்பனைக்கதைகளையும், கற்பனைச் செய்திகளையும்,


— படிப்பகம்

www.padippakam.com

மறைமானங்களையும், நமக்
கு அரசியல் விவகாரங்க
ளில் அதிக ஈடுபாடு உண்டு
என்பது போல் ஒவ்வொரு
வருத்தெரிவுகள் ஒவ்வொரு
தீர்க்க தரிசனங்களையும்
சொல்லிக் கொண்டிருந்த
னர்.

ஒவ்வொருவரினதும்
கதைகள் கதிரேசனுக்கு
நாராசமாக காதுகளில்
ஒலித்தன. காலை 6.30மணி
க்கு எலாம் அலறத்,
திடுக்கிட்டெழுந்த கதிரேசன்
விறுவிறென்று காலைக்
கடன்களை முடித்தான்.
கொட்டாவியொன்றை மறைக்கி
விட்டு தேனீர் தயாரித்து
வாயில் ஊற்றிக் கொத்தனைத்
தடாங்கிக் கொண்டு தனது
"டொக்குமென்ரைத்" தேடி
னான். அவனது ரூம் நண்ப
னை செல்வன் என்னடா?
விடிய எழும்பி "தட புட"
என்று ஓடித்திரிகின்றாய்?
எங்கே போகப் போகிறாய்?
எனக் கேட்டான். இன்றை
க்கு நெஸ்ரோரண்டில் ஒரு
கேட்க வேணும். அது தான்
எனது "வேர்க் பெமிற்றைத்
தேடுகின்றேன் என்றான்
கதிரேசன். வேர்க் பெமிற்?
உனக்கு அது தந்து மூன்று
வருடமாகிவிட்டதே? இப்ப
தேடுகிறாயே.. எங்கு கசங்கிப்
பட்டு முடங்கிக் கிடக்குதோ?
இப்ப இதில் தேடுகின்றாய்.
யாருக்கிது தேவையும்' என்
இந்த அவசரம்? ஆறுதலா
கப் பார்த்து எடேன். ஏன்
நேற்று எடுத்து வைத்திருக்
கலாமே...? அதுவா?
மறந்து விட்டேன். இந்த
அக்கறையீனம் தான் எப்
போ நீங்கப் போகுதோ என்
றான் செல்வன்.

வந்து நான்கு வருடங்
களாகியும் ஏதாவது வேலை
தேடிச் செய்ய வேண்டும் என்
ற நோக்கமின்றி மாதாந்த


படிப்பகம்

www.padippakam.com

சோறும் காசையும் எடுத்துக் கொடுத்தனர். 7 மணி
திச் செலவு செய்து விண் ட்ராம்மைப் பிடிப்பதற்காக
வம்பு போக்கியவர்களின் ஓடோடிச் சென்று ராம்பியில்
சந்திரசேகரனும் ஒருவன். நான் தொற்றிக் கொண்டான்.

ஏன் வந்தேன்? நான்
இன்று வாழும் இது என்ன?
என்று சிந்திக்காது வாழ்ந்
தபடியால் தான் இப்படிப்பட்
டனக்களோ?

சந்திரசேகா! உனது
ஜோர்க் பெட்டி அந்த அது
மாளிகை மேலிருக்கும்
"டாட் போட்" பெட்டிக்குள்
இருந்த மாதிரி எனக்கு ஒரு
ஞாபகம். அதைப்பார் என்
றன் செல்வம்.

சந்திரசேகரன் படும்
பாட்டையும், அவஸ்தையையும்
விலவித்துக் கொப்புக் கொண்
டாலும். அவனும் எங்கோ
வேலை தேடிப் புறப்படத் தயா
ரானான்.

சந்திரசேகரன் மனதில் பல
கற்பனைகள் பயங்கரமாகத்

அவன் அப்பொன்னா இருக்
கையில் ஆதரவாகமாக இரு
ந்தாலும் அவன் மனத்தில்
யாழ்ப்பாணம், உண்மைத்தொ
சொந்த பந்தங்களோ ஏது
வீட்டு பிள்ளைகள், காசு
இல்லாத காரணத்தால் சந்
நத்தால் தம்மை ஒதுக்கி
வைத்த நிகழ்வுகள், எல்லாம்
திரைப்படம் போல ஓடிக்
கொண்டிருந்தன. வீட்டுக்
குப் போகும் போது கையில்
கொஞ்சப் பணம் வேண்டுமே.
அங்கு நான் எனது அறை
குறையாக விட்ட படிப்பைத்
தொடர முடியுமா? அதற்
கான பருவமும் கடந்து விட்
டது. அந்த மனமும் போய்
விட்டதே. ஏதாவது தொ
ழில் ஒன்றை ஆரம்பிக்க
வேண்டுமே. எப்படி எனது


படிப்பகம்

www.padippakam.com

குடும்பத்தைப் பெறுவது? அது தான் கிடக்கட்டும். சகோதரிகளுக்கு, அக்காவின் சின்னமகளுக்கு,.... சொந்த ஏதாவது வாங்கிக் கொண்டு போகவேண்டாமா? சின்னம்மமகள் மாமா... எனக்கு வெளிநாட்டிலிருந்து என்ன கொண்டு வந்தனீங்கள்? என்று கேட்டாள். நான் என் செய்வேன்? கதிரேசனுக்கு ட்ராம்பில் இருக்கவே நல்லவடத்தில் போய் இருந்தது. கடைசி 2000 DM ஆவது இருந்தால் போதுமே. என்று அவனது ஏழைமனம் நினைத்தது.

கதிரேசன் போகவேண்டிய இடமும் வரவே இறங்கி எதிரேயிருந்த சைன் நெய்ம் போர்டை நோக்கி அவனது கால்கள் நடை போட்டன. உலகத்தில் உள்ள கடவுள்களையெல்லாம். அந்தக் குறுகிய நிமிடங்களில் கூப்பிட்டு நியாயித்துக் கொண்டு நடந்தான். ஏஜன்ஸிக்காரரே தன்னை வரும்படி சொன்னபடியால் தான் இங்கே அவசரமாக, அவன் அங்கே வேலைக் கொண்டிருந்தான் பாத்திரங்கள் கழுவும் வேலை, மணித்தியாலம் 5 DM என வந்ததுவே அவனுக்கு அவர்கள் சொன்னபடியால்... அதுவே போதும் 1.50 F என்றாலும் வேலை செய்வேன் என்று அவன் உள்மனம் சொல்ல அந்த வேலைக்கு ஒப்புக் கொண்டான். இங்கே இருக்க வரும் காலம் வரைக்கும், அதாவது மூன்று மாதம் வேலை செய்தாலும் போதும். அதற்கிடையில் சோஷல் காசும் மிச்சம் பிடித்து கொஞ்சம் சேர்த்து வருவேன்... என அவன் மனம் கற்பனையில் பறந்தது.

அவன் வந்து நான்கு


படிப்பகம்

www.padippakam.com

வருடங்களாகி விட்டன,
இப்போதுள்ள அறிவு, வந்த
காலத்தில் இருந்திருந்தால்
ஏன் இந்தப் பட படப்பு?
ஏதோ ஜோஸ்யமாகி தான் சொந்
தநாடு. இங்கு தான் நாம்
நெடுகவும் இருப்போம்....
என்று நினைத்து தானதைக்
கடைப்பிடியாமையால் இந்தநி
பட்டமோ? இல்லாவது கால
மும் உறங்கிக் கிடந்த உணர்
அதன் இன்று தீர்மானித்தா
குவதன் மர்மம் என்ன?

சுரேசன் நெஞ்சு
தோரணத்தை நோக்கித் தன
து பார்வையை விட்டவாறு
"செவி" வந்திருப்பாரோ?
என்று ஏங்கிப் பார்த்த வண்
ணம் நடக்கின்றான். வாயில்
லே.. என்ன ஆச்சரியம்?
நான்கு ஐந்து தொப்புந்தில்
ருந்து சிரிக்கின்றனவே. இந்த
இடத்தில் தமிழ்ப் பெடியள்
இல்லையே. இங்கினை வருவதும்
இல்லையே. நான் தான் இந்த
இடத்துக்கு முதலாவதாக
வந்து வேலை கேட்டுச் சென்
றேனே. இவர்கள் யார்? இவ
ர்களே பாகிஸ்தானி ஆட்க
ளாயிருக்குமோ? என்று
எண்ணியவாறு தன்னுடைய
பார்வையைச் செலுத்தினான்.
வாயில் நெருங்க நெருங்க
அவன் மனம் திக்.. திக்.. என்
றது. போகப் போக இவனை
யும் நம்பினைத்தவர்கள் நின்
றன அறிந்து கொள்ள அவனுக்
கு அதிக நேரம் எடுக்கவில்லை
முன்பு எங்கோ பார்த்த வழி
பார்கள் அங்கு இன்று இணைந்
திருக்கக் கொண்டிருந்தார்கள். சுரே
சேசன் அவர்களைக் கண்டு
இணைத்துக் கொண்டிருந்தான்
நின் காரியம் கெட்டுவிடும்
என நினைத்துக் கொண்டு
அவர்களை நோக்கி ஹலோ!..
என்று சொல்லி விட்டு நெஞ்
ந்தோரணங்களில் "வீச்"ணைப்
பதித்தான்.

மேசையின் அருகே


படிப்பகம்

சிரித்துக் கொண்டு 'இன்றைக்கு சைன்ஸ் பெண்மணி, குட்மோர்னிங்! நான் 'செல்'டன் கதைக்க வேண்டும்' என்று கூறி தனது டொக்குமென்ஸை மேசையில் வைப்பதற்காக, தனது கைப்பையிலிருந்து எடுத்தார். ஹலோ! குட்மோர்னிங்! என்ன அலுவல் என்பது போல் ஆங்கிலத்திலே கதைத்தார். கூறிய விடயம் பற்றிச் சொல்ல 'வன் மினிட்' என்று உள்ளே சென்றவர், செல்'லுடன் மீண்டும் வந்தார். குட்மோர்னிங்! என்று கூறி என்னை மன்னிக்கவும்: என்றார். நானே உமக்கு T.P எடுக்க இருந்தேன் அதற்கு முன்னர் நீரே வந்து விட்டீர்.

தொடர்ந்து உம்முடன் கதைத்த போது / மணித்தியாலம் 5 DM படி சம்பாதித்து வேலை செய்யும்படி கூறி வேலை கொடுக்க சொன்னீர். ஆனால் இன்று அதே வேலைக்கு, மணித்தியாலம் 3 DM க்கு வேலை செய்வதாக ஒருவர் வந்து கேட்டார். உம்மை நினைத்தவர் தான் என்று நினைக்கின்றேன்.

தொடர்ந்து கூறுகின்ற வரவேற்பாளர் ஒருவர் தான் இந்த ஏற்பாட்டைச் செய்தார். இப்போ வேலை செய்ய இருப்பவர் வரவேற்பாளரிடம் கதைத்த போது அடையாளம் காண முடியாத வரவேற்பாளர், யார்தான் அந்த ஆள் என்று உமது வேலை பற்றி எழுதிய சம்பள விபரத்தைக் காட்டியிருக்கின்றீர். சம்பள விபரத்தைப் பார்த்த அவர் (தன்னினத்தவன் என்றும் பார்க்காது)... 3 DM க்கு தான் வேலை செய்வதாக ஒப்புக் கொண்டார். நாளை காலை இங்கு உழைக்க வந்

நீயேன் தான் தம்பி, எனவே அவரை வெளிக்கு அமர்த்தி விட்டோம் என்றார். அதோ அங்கு இருக்கின்றார், என்று அந்தக் கொம்பைச் சுட்டிக் காட்டினார்.

நிதிசேனனுக்கு அந்த கிடத்திலேயே மண்டையை பெருவோமா? என்று நினைத்துக் கொண்டு அவர்களைத் திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டான். அவன் மனமோ அங்கலாய்த்தது. வெம்மினத்தவர் தான் வாழ்ந்தால் போதும் என்று அன்று நடக்கும் நினைத்தபடியாகத்தானே இன்று நிலை ஆகிவிட்டது. நாடு இன்று உலக நாடுகளில் அடிமைகள் போல் வாழ்கிறோம்.. நான் பெரிய வேலை 3 பேரு ஆக குறைந்த ஊதியத்துடன் செய்வதற்கு, எனக்கு இரண்டை முண்டியடித்து விட்டார்களோ, இப்படிச் சம்மதித்து தமது பாவனைத்தைத் தீண்டி சேர்ந்தவர்களுக்கு சாதகமாகச் சொல்கின்றனரே என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே. இப்படியான இந்த ஒரு நிகழ்ச்சியினையும் சேர்த்து கொடுக்கிறதும் இந்த குறைந்த ஊதியத்தில் சிறு வேலை எதிர்காலம் எனக் காட்டிக் கொடுத்து விட்டார்களே என்று அவன் மனம் துடிக்கத் தொடங்கியது சாந்தியும் வேகமாகப் பறந்தது. சேர்மன் மண்ணிலேயே வாழ்ந்து, அவர்கள் செலாச்சாரத்தில் வாழ்ந்தும், நேர்மைய பண்பு இவர்களுக்கு இல்லை என்றால் தாய் நாட்டில் உள்ளதும் என்பதற்கு என்ன உத்தரவாதம். சேர்மனியர் சேர்மனியர் தான். வெம்மினத்தவர் வாழ்க்கை முறை... சிக்கனமும் தாகமும் மேற்கில் சிசித்தாலும் சொக்கி தகாது... என்பது போன்றது தான்.. என வைத வண்ணம் நடந்தோ

www.padippakam.com

ஏனென்றால் ஏதோ இருந்தது
நான் வெளியாகிவிட்டது.
இப்போது நான்
இலங்கையர் உறக்கம்
கலைந்து துயில் நீங்கியோர்
என்போரும். உறக்கம்
கலைந்து அறிந்தபடி செயற்
பட முன்னர் நாட்டை
விட்டு நீங்க வேண்டிய
கால கட்டம் நெருங்கிக்
கொண்டிருக்கின்றது. இதன்
பின் நான் இந்த விழிப்புணர்வு
தோன்றியுள்ளது பாருங்கள்.
முன்பு என் இனத்தை
யோசிக்கவில்லை. முன்னைய
கால கட்டத்தில் நேர்மையில
அரசு " இலங்கை அகதிக
ளைப் பார்த்து, நீங்கள் இந்
நாட்டுப் பிரஜைகள்" என்
று சொல்லி.. இப்போது
அவ்வார்த்தையை மறந்து
விட்டதா? அப்படியில்லை
யே. அப்போது ஏன் உறக்
கம் கொண்டார்கள்.
இப்போது நீ துயில் நீங்
கி தம்மைத் தாம் உணர்கின்
றீர். இந்த விழிப்பு நிலை
அனைத்து மனத்தின் போது ஏற்
படும் மேலிய ஒளியைப்
போன்றதே.

சுதேசத்தைப் போல்
எத்தனை ஆன்மாக்கள்
கடலில் துரும்பாக தவழ்
ந்து கொண்டிருக்கின்றா
கள்! எதற்காக என்ன?
எதில் ஆரம்பமாகப் போகு
ம் கேள்விக்குரிய காரணத்
து சிந்திக்கப்படுவதன் காரணம்
யார்? பொறுப்புடன் எவ
ரும் வாழ்க்கையை உணர்
ந்தால் எந்நேரத்தி
லும் ஒருவருக்கு பயம்
ஏற்படமாட்டாது.

இங்ஙனம்.
விக்னே

நேர்மையே வாழ்க்கை
யில் வெற்றியளிக்கும் ஆயுதம்.
மனிதரை நேர்மையாக்
குவதும் இப்பண்பே.


படிப்பகம்




ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை அன்றுகாலை என்றும் போல் ஆரவாரமாகக் காட்சியளித்தது. மாணவர்களும், ஆசிரியர்களும் போய்க்கொண்டிருந்தனர். என்றும் இல்லாத கலை அன்று காணப்பட்டது. ஏறக்குறைய 30 பிள்ளைகளைக் கொண்டதாக அந்த ஐந்தாம் வகுப்பில் ஆண் பெண் இருபாலாரும் இருந்தனர். சுப்பிரமணியம் வாத்தியார் கணிதம் படிப்பிப்பதற்காக, புதிதாக மாற்றம் பெற்று இப்பாடசாலைக்கு வந்துள்ளார். முதலாம் பாடமாக கணக்குப் படிப்பிக்க கையில் கணிதப் புத்தகத்துடன், சொக்கிக்கட்டி, டஸ்ரர், சிறுதடி சகிதம் உள்ளே வந்தார். பிள்ளைகள் ஆசிரியரைக் கண்டும் காணாதது போல்

சத்தம் போட்டுக் கொண்டு தியுதி கதைகளில் மூழ்கியி ருந்தனர். சில பிள்ளைகள் மட் டும் பயபக்தியுடன் எழுந்து நின்று வணக்கம் சொன் னார்கள். ஏனையோர் தமது கதைகளை நிறைந்த ஆர்வ முடன் கதைத்துக் கொண்டு இருந்த இடத்திலேயே இருந் தனர். ஆசிரியருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. சத்தம் போட வேண்டாம் என கையை மேசையில் ஓங்கி ஒரு தட்டுத் தட்டினார். பிள்ளைகள் மௌனமாக இருந்தனர், வணக்கம் செ லுத்தி மரியாதை செய்த பிள் ளைகளை அமரச் சொல்லி விட் டு ஏனையோரை அப்படியே நிற்கச் சொன்னார். உங்களைப் படிப்பிக்க முன் பழக்க வழக் கத்தைப் படிப்பிக்க வேண்டும். என்று கூறிவிட்டு கையில் பிரம்பை எடுத்துக் கொண்டு நின்றவர்களின் முன் வரிசை யில் நின்ற பையனைக் கூப்பி ட்டார்.

இங்கு வா! நீ யாரு டைய மகன்? எங்கே இருக்கி றாய்? என்ற கேள்வியைக் கேட்டபடி அவனை நோட்டமிட் டார். பார்ப்பதற்கு அழகான, துடுக்குத்தனமும் கொண்டவனு மாய், மேல்நாட்டுப் பாணியிலான காற்சட்டை, சேட், சப்பாத்து அணிந்திருந்தான். சும்மா சொல்லி விடக் கூடாது. வடிவாகத் தான் பையன் இருக்கின்றான் என ஆசிரியர் நினைத்தார். தம்பி! என் ன பேசாமல் இருக்கிறாய். முன்பு போயிட்ட தனியும் படித்தனீர்? சிறுவன் சிரித்துக் கொண்டு பாசாங்கு செய்தபடி, நான் டானியல் வேலுக்காவி மாஸ்ரரிடம் படித்தனான். எந்தப் பள்ளிக்கூடம் என்றார் ஆச்சரியத்துடன், 'கிறண்ட் தல' என்றான் சிறுவன். அது எங்க இருக்கு து. என் வாழ்நாளில் இப்படிக்

தேர்வாகப்பட்ட திரும்பியே
என ஆசிரியர் சொல்ல.. இது
ஜெர்மனியில் இருந்து. நான்
அங்கேதான் படிச்சேன்
டொச்சில கணக்கை
விளங்கப் படுத்துவது போல
சேர். "ரீட் பிளீஸ் சேர்..
தமிழில் எனக்கு தெரியாது.
என்றான் சிறுவன். அடேய
தமிழைக் கொல்லுகிறாயே
என்று ஆசிரியர் தலையில் கை
வைத்தாள். பின்பு பேனையீது
வாட்டு உண்மைப்பார்த்தபடி-
லேயே கொஞ்சம் ஜெர்மனி
எனக்கு விளங்கி விட்டது.
சரி பெயர் சொல்லும் வாரன்..
மற்றவர் பேசலாம். என்றாள்
அந்தப்பையனும் எழுந்திரிச்
சும் இன்றி, கூப்பிட்டீங்களா?
இல்லே.. இப்ப.. மோணிங் சேர்!
என்று சொன்னபடி நின்றான்,
உனக்கு என்ன
பெயர்? சுரேசன் என்றான்.
சுரேசன்! வகுப்புக்கு ஆசிரி
யர் வரும்போது எழும்பி
மரியாதை செய்யத் தெரியா
தா? என்று உறுக்கினாள்.
பையன் கண்ணைச் சிமிட்டிக்
கொண்டு நின்றான். அவனும்
வெளிநாட்டில் வாழ்ந்தவன்
போன்ற சாயல் - ஆசிரியருக்
குத் தெரிந்து விட்டது. மரியா
தை என்றால் என்னசார்?
என்றான் நேர்மையாக, நான்
படித்த பள்ளிக்கூடத்திலே
அப்படிச் சொல்லவில்லையே.
மாஸ்டரும் நானும் நண்பர்கள்
போல் தான் பழகுவோம். நான்
ஆசிரியரைக் கண்டால் எழும்பி
நிற்பதில்லை. அவரும் என்
னைக் கண்டால் எழும்புவதோ
என்று சொல்வதும் இல்லை.
ஏன் சேர் எழும்ப வேண்டும்.
ஆசிரியர் ஏதாவது கேட்டால்,
அதை எடுத்துக் கொடுக்கவேண்
டும் என்பதற்காக எழும்பு
வதா? என்று கேட்டான்.
ஆசிரியர் திகைத்தாள். பதில் சொல்
ல முடியாதவளாய், 'சிட் எந்த
இடமீ' என்றாள். அந்த சிறுவன்

கம்பேக் ... என்றான். இது என்ன? அது நேர்மையில் இருக்கின்றது. நான் வாசா ந்த இடம் இயான். அது என்ன தம்பி? அது எங்க இருக்கு? அது மொன்ரியல் இருக்குது. சேர்.. சேர்.. maths ஐ மறைந்தில், அவ்வாட்டி ஆங்கிலத்தில் சொல்லித்தாங் கோ. எங்களுக்கு தமிழில் Explain பண்ணுங்கோ. Please sir! ஆசிரியருக் கு நிலைமை சங்கடம். சசி சசி.. நான் பிரெஞ், டொச், தெரியல படிக்க வேணும் போய் நீயும் கையைக் கட்டிக் கொண் டு நில் என்றார்.

பின்னர் ஆசிரியர் அச்சிறுமியைச் சுட்டிக் காட் டி.. இங்கே வா எனும் என்றார். அச்சிறுமி கை நகங்களுக்கும் கண், வயிக்கும் பூச்சுக்கள் பூசியபடி பெண்ணுக்கே சிறுமி யின் கோலத்தில் இருந்தா ளும் இளம் மங்கையாக என்று தான் காட்டிக் கொடுத் தது. என்னம்மா! உனக்கு ஆசிரியர் வந்தால் எழும்பி மரி யாதை செய்யவேண்டும் என் று தெரியாதா? எனக் கேட் டார். அந்தச் சிறுமி தெரியா து சேர். தெரிந்திருந்தால் நான் அப்படிச் செய்யமாட்டேன். எங்கள் நாட்டில் அப்படிச் சொல்லித் தரவில்லை. அதோடை நாங்கள் வகுப்பில் சத்தம் போடுவோம். ஏனென்றால் எங்கள் வகுப் பில் சத்தம் போட்டிருந்தால் மற்றவர்களுக்கு கேட்காது. கணிதம் என்ன படிச்சனீர்? எங்கள் கணிதம் என்றால் கிப்டமாக இருக்கிறது. தமிழில் உள்ள புத்தகத்தின் படி எனக்கு விளங்கியது. நான் படித்த முறை வேறை. டெனிஸ் மொழியில் விளங் கப் படுத்தினால் நான் படித்தி ருப்பன் சேர். டெனிசா? அது எங்கே? கேட்டது அந் த ஆசிரியர். டென்மார்க்கில்

www.padippakam.com

இந்த மொழியிலதான் பேசுகிறீர்கள். என்னவோ! உங்களுக்குத் தெரியாதா? ஓம் அம்மா! தமிழையும் ஆங்கிலத்தையும் தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாதம்மா! என்று கூறிக்கொண்டு பிள்ளைகளை மீண்டும் உற்றுப்பார்த்தாள். தாய் வாசித்த மேலை மேலை நாட்டுப் பள்ளிக் கூட வாசிப்புள்ள பிள்ளைகள் தானென உணர்ந்துக் கொண்டு... இது உங்கள் தவறு அல்ல. நீங்கள் இளையவர்கள். சூழ்நிலையின் மறுபலிப்புக்கள் தான் நீங்கள். என்று சிந்தித்தவண்ணம்... நீங்கள் நல்ல பிள்ளைகள்! .. உங்கள் திறமைக்கு இணைதம் படிப்பிக்க வேறு ஆசிரியர் வருவார்.... என்று சொல்லி முடிக்குமுன்.. ... தேர்வமணியொலி இடித்து வந்த கின்றது பையன் சேர்.. சேர்.. ஏன் இந்தத் தேவாந்த நடையைக் கொண்டு வந்தீர்கள். நடை படுத்தும் பொலிவாக வைப்பீர்களில்லவா? நாங்கள் மாட்டோமே. ஏன் பெரிய மொழி கொண்டு வாருவோம் என்றனர். ஓம் தம்பி! புதிய பெரிய நடை வாங்கி விட்டுவிடுவோம் அறிந்து பெண்களுக்கு எடுத்துப் போவோம்... நீங்கள் தொடர்பாக பெண்ணின் எடுக்கச் செய்யப் போகிறீர்கள் எனக் கூறி விடை பெற்றுச் சென்றார். முதலாம் பாடமும் முடிந்தது.

டிங்..டிங்..டிங் மணி இரண்டாம் பாடத்துக்கு மணி சொல்லியது. சுமார் 45 வயது மதிக்கத் தக்க பெண்மணி இவர். சாந்தாம்பிள்ளை தமிழ்ப் பாடத்திற்கு வருகின்றார். பிள்ளைகள் இன்னைத்தது ஏங்கவோர் தமிழ் பொருநாட்டைப் பற்றியும் தமது அனுபவங்களைப் பற்றியும் மாறி மாறிக் கதைத்துக் கொண்டிருந்தார். தாய்நாட்டில் பிறந்திருந்த ஏக்கமிகுதியின் உயிரைக் கையில் வைத்துப் பிழைத்து வாழ்ந்த

www.padippakam.com

சிறுவர் சிறுமியர் பாலியர்கள் போல அவர்களது கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அதனைச் சற்றுவர் சிறுமியரு டன் பொன்னையா வாசகம் கொண்டவர் கதைத்துச் சிறு பிடித்து மன்னிக்கின்றோம் என்று தான் சொல்லவேண்டும். அவர்கள் மட்டும் தான் ஆசிரி யைக்கு வணக்கம் செலுத்தி னர். ஆசிரியைக்கு இது ஒரு பழமையும், புதுமையாகவும் கோபமாகவும் இருந்தது. ஒரு சிறுமி மேசையின் மேல் அமர்ந் து கொண்டு கதைத்துக் கொண் டிருந்தார். ஆசிரியை சத்தம் போட வேண்டாம் என்று சத் தமாகக் கத்தினர். பின்னர் சிறிது நேரம் இருந்தனர். அந்த மேசையில் இருந்த சிறுமியைக் கூப்பிட்டு என்ன? இது தமிழ் தெரியுமா? ஏன் சத்தம் போடு கிறாய்? படிக்க வேண்டும் என் று தெரியாதா? என ஏசிவிட்டு நீ என்ன பெயர்? பெட்டி ஈழப்பிள்ளைகளல்லவா? அடக்க ஒடுக் கமாக இருக்க அம்மா, அப்பா பழக்கவில்லையா? ஏன் சீச்சீ வெட்கங்கெட்டதுதான் சீ, காலி, ஆசை கெட்ட பெட்டை பெருத்த இல்லையோ? அவங்க ளைப் போலத்தான் நானுங் எண்ணினேன் சட்டென்று ஆசி ரியை.

ஆசிரியைக்கு என்ன கோபமோ? என்று பேசினது விட்டு நீ எங்கே இருக்கிறீர்? எங்கே பிறந்தனீர்? இப்படி எனி னம் சிறுக்க யார் சொல்லித் தந்தது? நான் டோட்மண்ட் டில் தான் பிறந்தனான். அது எங்க? ஜேர்மனியில இருக்கி றது மிஸ் என்றாள். எனக்கு தமிழ் எழுத வடிவாகத் தெரியாது. அங்கு தமிழ் பள்ளிக்கூடம் இல்லை. அதால நான் படிக்க வில்லை. இனித்தான் படிக்கப் போறன். மிஸ்! எழுத்துக்களும் வடிவாகத் தெரியாது. அம்மா. அப்பா வேலைக் குப் போனதால அவர்களும் எனக்


படிப்பகம்

www.padippakam.com

கூட விளக்கித் தரவில்லை. நான் டொச்சில் தான் படிச்சனான். டொச் பேசுபவள், பேசுபவர். இங்கிலீசும் டொச் வாசிக்கிற உச்சரிப்பில் வாசிப்பன். தமிழ் தான் தெரியாது... என்றாள்.

ஒரு பிள்ளையைக் கொண்டே மற்றப் பிள்ளைகளும் இப்படிப் பட்டவர்கள் என்பதை உணர்த்த அவருக்கு அதிகம் நேரம் எடுக்கவில்லை. ஒவ்வொருவரையும் கூப்பிட்டு விசாரித்த போது.. ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சலாந்து, டென்மார்க், இத்தாலி, கனடா, இந்தியா, என்று வரிசையில் வந்து கொண்டிருந்தன. ஆசிரியை அவர்களை நோக்கி.. இது இலங்கைப் பள்ளிக்கூடம். இங்கே நீங்கள் பாடம் படிக்க முன்பு பழக்க வழக்கம் பழக வேண்டும். சத்தம் போடக் கூடாது. [illegible] ஆசிரியர்களுக்கு வணக்கம் செலுத்த வேண்டும். பெரியோர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும். இது எங்கட பண்பாடு. வேற்று நாட்டில் பிறந்தும் வாழ்ந்தும் வந்த உங்களுக்கு இவை தெரிய நியாயமில்லைத்தான். சொந்தக் கலாசார பழக்கவழக்கங்கள்.. இனிமேல் இப்படி நடக்கக் கூடாது. உங்களில் பலருக்குத் தமிழ் எழுதத் தெரியாது, என்றபடியால் உங்களை இன்டைம் வகுப்பில் தான் படிக்க வேண்டும். உங்களுக்கு வயது கூடுதலாக இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது எனக் கூறி அதற்கான ஒழுங்குகளை நான் அதிபரிடம் கதைக்கின்றேன் எனக் கூற. அடுத்த பாடத்திற்கான மணி அடிக்க ஆசிரியை சென்று விட்டார்..

இன்றைய பாடம் சமய பாடம்.. சமய பாடத்துக்கு ஆசிரியை ஒருவர் சைவநெறி என்ற புத்தகத்தைக் கையிற் கொண்டு வகுப்பிற்குள் வந்தார். முன்னர்

www.padippakam.com

கிழிபட்ட பின்னைதான் ஜான்
மரியாளையுடன் சேர்ந்து
ஆட் ஜோனிஸ் சீசர் என்
றனர். பேற்றவர்கள் அங்கிருந்து
இடங்களிலேயே இருந்து
தானைக் கோர் போட்டுக் கொ
ண்டிருந்தனர். இவர் கையில்
கால் உணவாக கிடைப்பது,
கீரை, என்று கூடத்துக்
கிடைத்துக் கொண்டு காத்துக்
கொண்டிருந்தனர். அதைப்
பார்த்து ஆசிரியையிடம் கேட்டுப்
பார்ன் வந்தது. என்ன உங்கு
போன ஆசிரிய - ஆசிரியை
போல் அதுவாப்பட்டவர்கள். இது
மாணவர்களுக்கு உரித்தான
தேவும் இருந்தது. அவர் அமை
தியாக இருங்கள். தவறு செய்து
சத்தம் போட வேண்டாம். இது
நம் தாய் நாட்டைப் பார்க்கிற
டம், என்பதை மறக்கக் கூடாது.
இடைவேளை நேரங்களில் இவ்
தன் கணக்காளம், விளையாட
லாம். ஆசிரிய - ஆசிரியைகளுக்
கு வணக்கம் செலுத்த வேண்

கும் பெரியவர்கள் இருக்கும்
போது சிறியவராகிய இவர்கள்
சந்தைகளில் இருக்கக்கூடாது,
இது உங்களைப் பாதிக்காது. உங்
கள் பெற்றோரைத்தான் பாதிக்
கும். மெய் இவர்கள் படித்த பாட
சாலையை, அறைப்பாங்கில் ஜூட்
ஆ மறந்து விட வேண்டும்
இவர்கள் பிள்ளைகளின் பழக்க
வழக்கங்களைப் பழகிக்கள்,
ஆசிரியர்களுக்கு திருப்பி எதும்
கதைக்கக் கூடாது. படிப்பு தீ
ர்ந்தது என்ப கதைகள் ஆசிரி
ஆசிரியர்களுடன் சாந்தமில் கூடா
து. இவ்வாறு கூறிய இந்த ஆசி
ரியையின் செய்கை, பிள்ளைக
ளிடம் ஆச்சரியத்தையும், மகி
ழ்ச்சி பக்கம் சந்தோஷத்தையும் கொ
டுத்தது. இந்தச் சீச்சர் எங்களை
எல்லாம் தெரியும் போல் கதைக்
கிறா என்று சொன்ன மந்தி
பையன் ஆசிரியையின் உறவி
னன் போலும். இந்த ரீச்சர்
தேசமணியில் இருந்தவ. எங்
களுக்குத் தெரியும். அங்கிருந்தாப்


படிப்பகம்

www.padippakam.com

படிப்பு, பழக்கவழக்கம், இவை
சிந்தனை முறைகள், பழக்க
வழக்கங்கள், எப்படி என்று
தெரிந்து கொள்ளும் நாளே.
எனவே தான் அவ எங்கிட
மந்த் "ரீசோர்ஸ்" போல
ஏதாவது... திட்டமிட்டு...
கையில் நடப்பும் கொண்டு
வரவில்லை... என்று மாணவ
மாணவியர் சிலர் கதைத்துக்
கொண்டனர்.

பிள்ளைகளே! இங்குள்ள
இறுக்கமான சமூகத்தில்
பிள்ளைகள் போல நல்ல பிள்
ளைகளாக வாழப் பழகிக்
கொள்ள வேண்டும். மேல்
நாட்டுச் சூழலில் படித்த
உங்களுக்கு இது கொஞ்ச
மாக இருக்கும். பொறுத்து பழ
கிக் கொள்ளுங்கள். அதற்
காக படிக்க கஷ்டமாக
இருக்கின்றது என்று பள்
ளிக் கூடத்துக்கு வராமல்
விட்டுவிட வேண்டாம். இங்
கள் தான் புது சமூகத்தை
உருவாக்கப் போகிறீர்கள்.
காந்தி, யேசு, புத்தன் போன்
ற பெரியார்களாக வந்து
நம்மை நல்வழி பெறச்செய்ய
ஏதாவது மிளிர வேண்டும்... என
தன் உள்ளக்கிடக்கையை
யும் வெளியிட்டு விட்டு...
சரி இப்போ பாடத்துக்கு
வருவோம் என்றார் ஆசிரியை.

மேடம் ஒரு கேள்வி யார்?
என்றதுடன் வெளிநாட்டு
வாசியாகிய பிள்ளைகள்
பதில் சொல்வதற்காக கையை
உயர்த்திக் கொண்டு நின்றார்
கள். மற்றையவர்களில் ஒரு
திறமையைக் கூப்பிட்டு கேட்ட
போது எனக்குத் தெரியாது
ரீச்சர். நான் பிரான்சில்
படிக்கும் போது இருந்தவ
ளும் தான் படிப்பிச்சவை.
நாங்கள் அப்படித்தான் படிப்
போமென்கிறோம் என்க கூறினாள்.
அதற்கிடையில் இருக்கிறபடி
மற்ற சிறுமி நாங்கள்
இப்படி அப்பொழுதான் இருச்ச

www.padippakam.com

வைக்கல் போறோன்கள். எழுது சமயத்திலிருந்து மத மெல்லாம் மாறிவிட்டபோடம் என் று எனது பெற்றோர்கள் நினைக்கும் போது நான் கேட் டிருக்கின்றேன். கடவுள் எல்லாம் ஒன்று என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். அப்ப ஏன் மாறினது என்று எனக்குத் தெரியாது. என்ன கீ.. கெட்டிக்காரய் நின்றீர். அவையெல்லாம் எமக்குத் தெரியும். உனக்குத் தெரிய வயதும் அறிவும் போதாது. அந்த ஆராய்வு உனக்கு வேண் டாம். இன்று இந்த சமயம் தானே படிக்கப் போறீர்? அது தான் படிக்க வேண்டும் என்று அம்மா கிப்போது சொல்லிவிட்டா... எல்லோரும் முதலாம் பாடத்தை எடுங் கோ! திருக்குறள் ஒன்று.... என்று தொடங்கியின் பாடம் முடிவதற்கான மணி ஒலி கேட்டதும் ஆசிரியை நேரே தொடருவோம் எனக் கூறிச் சென்றார்.

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுடன் மற்றை ய பாட ஆசிரியர்கள் என்ன மாதிரிச் சமாளித் தார்களோ அன்றைய பாடசாலை நாளும் இனிதே முடிந்தது. அன்று அதிபர் ஆசிரியர்களுக்கு திடீரென அறிவித்தல் ஒன்றை வெளி யிட்டார். சிறன் சாரம் நாளை காலை 10 மணிக்கு பெற்றோர் - ஆசிரிய சங்கம் கூட்டம், பிள்ளைகளின் படிப்பு, பழக்க வழக்கங்கள், என்பன ஆராயப்பட வேண்டும். ஐந்தாம் வகுப்பைப் போன்ற பிரச்சினை எல்லா வகுப்புகளிலும் இருக் கின்றது. எனவே வயது மட் டும் இன்றி கணிக்கப்படா மல் தமிழ் மொழி அறிவு, விவே கம், உளக்கம், என்பவற் றை அடிப்படையாகக் கொண்டு தான் வெளிநாட்



படிப்பகம்

www.padippakam.com

யில் படித்து வந்த பிள்ளைகளை வகுப்பில் சேர்க்க வேண்டும். வயது வகுப்புக்கு மீறி கூடுதலாக இருந்தால் அதற்கு ஒரு பதில்கட்டையும் நாம் செய்ய முடியாது... இன்றைய அம்சங்களாக கொண்டதாக இருந்தது.

பெற்றோர்களும் ஒத்தியமாக உரையாடப்பட்டு அவர்களுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மறு நாள் பாடசாலையில் 10 மணிக்கு பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் நடைபெற்றது.. அதில் பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் படிப்பு போதாது என்றும் அதற்கான முயற்சிகளுக்கு ஆசிரியர்கள் ஒரு ஒத்துழைப்பை தீவிரமாக ஏகமனதாக வேண்டினர்.. பிள்ளைகளின் தராதரம் தாய்நாட்டுக்கு வந்த பின்னர் தான் பெற்றோரால் அறிய முடிந்தது. விசித்திரம் தான்.

- முற்றும் -

---

4ம் பக்கத் தொடர்ச்சி

அரும்பாடுபட்ட தியாகவீரர். அகிம்சா வழியிலே போராடியவர். கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்றை நடாத்திய மகான். இன்றும் உலக மக்கள் அறிய புகழுடம்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இவரது "சத்திய சோதனை" எனும் நூல் வரலாற்றிலே சிறப்பு வாய்ந்தது....

கடந்த ஒக்டோபர் 2ம் திகதி காந்தியின் பிறந்த தினத்தை நினைவு கூருமுகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.


படிப்பகம்

# அலைக்கும் மன அலைகள்

- கபாலிதாசன் -

இளமை ஒரு இனிமை அதில் சில புதுமை
பழமை முறை தருமே இது வழமை
மழலை மொழி கடவுள்வழி அறிவீர்.
முதுமை அது மனிதன் பெற தொடர்வீர்
புதுமை ஒரு பழமை தந்த குழந்தை.
அகிம்சை இது காந்தி சொன்ன வேதம்.
குறைகள் என்றும் நிறைவாகிடவே முறைமை.
பொறுமை வழி பெருமை தரும் இது உண்மை.
நிலைமை அதை மாற்றி நிலையாக்கிடவே திறமை.
கலைகள் இவை கடவுள் தந்த செல்வம்.
கடல் அலைகள் என்றும் காற்றின் வழி அசையும்
மன அலைகள் நம்மனதைப் போட்டலைக்கும்.

xxx

## குழந்தை

பிஞ்சுக்காலாட்டி பிஞ்சுக்கைகள் நீட்டி
பஞ்சுக் கட்டிலிலோ இல்லை ஓலைப்பாயினிலோ
விஞ்சும் அழகு காட்டி விழிகளிற் கிரணம் நீட்டி
கொஞ்சும் மொழிபேசும் கொடைதான் குழந்தையன்றோ!

xxxxx

www.padippakam.com

# ஜேர்மனி என் காதலி

— நிருபா. தங்கவேற்பிள்ளை —



"நிகேலஸ் நோறுங்கள்" க்கையோகச் சந்தித்து விட்ட
மேலும் இலங்கையில் நடக்கு அவன் தாயகத்தை விட்டு
ம் அநியாயங்களைத் தின ஜெர்மனி வந்து நான்கு வரு
மும் கேட்டுத் தெரிந்து கொள் டங்கள் பறந்து விட்டன. கடல்
வதே நாளாந்தம் ராஜாவு கடந்து வந்து விட்டானே யொ
டைய கடமைகளில் ஒன்று. ழிய அவன் சிந்தனைகள் அந்
வராணமையை மட்டுமே வாழ் ந்தும் அவனைப் பெற்றெடுத்த


படிப்பகம்

www.padippakam.com

கிடைத்திருந்த ஈழநாட்டைச் சிந்திய ரத்தம், எப்போது தாயகம் திரும்புவேன்? என்னைப் பெற்றவர்களையும், உடன் பிறப்புக்களையும், சொந்தங்களையும் காண் பேன்!; பள்ளிமுதல் இளம் பருவம் வரை நினைவுகள் பசுமரத்தாணி போல் மனதில் பதிந்து விட்டதை எண்ணி தினமும் அவன் மனம் ஏங் கித் தவித்தது.

யார் ஆணைக்கும் அடங்காத ஊர்க்கூட்ட த்துடன் கூடியிருந்தானே அன்று, நாட்டைப் பற்றி, அதி கம் கொண்டவன் அவனோடு சேர்ந்து மொத்தம் அக்கட் டடத்தில் குடியிருந்தவர் கை விரல்விட்டு எண்ணலாம். கேசவன், அவன் மனைவி பிள்ளைகளுடன் குடியிருந் தான். அவன் மனைவி இரகசி யம் பேசினாலே அது பக்கத் து ஊருக்குக் கேட்கும்.

சுவிஸ்ஸாலந்திலும் ஒரு பொறுமையை வேறும் என்று அடிக்கடி கேசவன் சலித்துக் கொள்வான். பிள்ளைகள் இங் கு எப்படி டொச்சில் படிப் பிக்கிறது? இங்கிலீஸ் பள்ளிக் கூடம் என்றாலும் பரவாயில்லை. பெரிதாகக் கதைத்துக் கொள் வார்கள். ஏன் இவர்கள் இன் னமும் அந்நிய மொழியிலேயே நாட்டம் கொள்கிறார்கள். தமிழ் மொழிக்காகப் போராடு கிறார்கள் அங்கே. இங்கு? பிரச்சினை தீர்ந்ததும் ஊருக் குப் போய் படிப்பிக்கலாம் தானே? என்று கேட்கலாம் போலிருக்கும் ராஜாவுக்கு. ஆனால் அவன் மௌனமா கி விடுவான்.

ரவி, புதுக்கனியான மாப்பிள்ளை. இருக்காத ஒரு வர் சொந்தத்தில் இருந்து விட்டதாக ஓர் திருமணக்க தையைக் கட்டிவிடுவான். காரணம் அந்த மாத்தில்


படிப்பகம்

www.padippakam.com

ஏதாவது தேவையில்லாத செலவினங்களைத் தரும், கொண்டாட்டங்கள், வைபவங்களுக்கு அழைப்பு வந்து விடுமோ என அவன் இடும் முன்னெச்சரிக்கை வேலி அது. வாழ்க்கையை அணுகும் முறைகளில் மக்களிடையே சில வரவேற்கத்தக்க மாறுதல் ஏற்பட்டாலும் நாடு இன்னமும் முன்னேற்றம் அடையவில்லை என நினைப்பவன் சிவ. கல்யாணமாகி இரண்டு மாதத்தில் இங்கு வந்து விட்டதால் நமக்கு இருக்கக் கூடிய மிகப் பெரிய சொத்து நேரம் என்பதை முழுமையாக உணர்ந்து விட்டதால் தன் மனைவியும் இங்கு வர வேண்டும் என ஆசைப்பட்டு பணம் சேர்ப்பவன்.

கிராமங்களில் மரத்தடியிலோ திண்ணையிலோ, வழிப்போக்கர் சிம்மா-உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். அல்லது வம்பு பேசிக் கொண்டிருப்பார்கள். 'அந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான் அவனுடைய அறையில் இருக்கும் மற்ற நால்வரும். எல்லாம் பழக்கத்தைப் பொறுத்துத் தான் என்று சமாதானம் சொல்லிக் கொள்வான் ராஜா.

அன்றும் அப்படித்தான் அவர்களின் கதைகளைக் கேட்கும் போது, அவன் மனதுக்குள்ளே ஒரு வேகம். ஒரு பெண்ணைப் பற்றி கேவலமாகப் பேசும் அவர்களுடைய குரல்வளையை நெரித்துக் கொன்றுவிடலாம். போல இருந்தது அவனுக்கு. வெட்கங் கெட்ட காட்டு ஜனங்கள்.

இதழ்களில் படர்ந்த மதுவின் சுவையை நாவில் சுவைத்துக் கொண்டே கையில் ஒரு சிகரெட்டைக் கொ-ளுத்தி வதங்கு முன் அருந்திய


படிப்பகம்

www.padippakam.com

ரின் பிரச்சினைகளுக்கு மு
ந்திப் புள்ளியிடுவதே அவர்
களின் நோக்கம். உண்மை
இருந்திருந்தால் இவர்கள்
சிந்தனாவிற்கு மோசமாகி
யிருக்கமாட்டார்கள். என்
று தீரும் எம்நாட்டுப் பிரச்
சினைகள்!

'வசந்தா' இற மறந்து
விட்டாள்' என்று இவர்
கூறும் சொல் கேட்டு கூடி
யிருந்த அத்தனை பேருக்கும்
ஒருமிக்கமான அனுபவம் தான்.
"உயிரை விட மானம் பெரிது"
கடைசி வார்த்தையைச்
சொல்லும் போது திக்கும்
தொண்டையை அடைக்
கும். நாம் ஏன் இன்னும்
அடிமைகளாகி வாழ வேண்
டும் இங்கே? தமிழர்களின்
இரத்தங்கள் என்று பதிலாகும்?
வாழ்க்கையை
அனுபவிப்பதற்கும் உலகை
த்தும் சம்பந்தமின்றி என்
பதற்கு இங்கு வாழும் மக்களே

சீர் எடுத்துக் காட்டு. அன்று
ஏதோ ஒரு சாட்டின் பெய
ரால் கேசவன் வீட்டில் அன்
னதானம் நடந்தது. நீக்
கு இனிக்க அவனுக்கு இத
யம் வலித்தது. அங்கு ஒரு
நேர்ச்சாப்பாட்டிற்கே ஏங்
கிக் கொண்டிருக்கும் ....?
மனைவிற்கு இன்றிரகிந்த தேர
வது போல மனம் எங்கோ
என்றோ நனவாகப் போகும்
தாய்நாட்டுச் சுதந்திரத்தைப்
பற்றி வட்டமிட்டது. அன்று
அங்கு இளிஸ்டா வந்திருந்
தாள்... அவள் பார்வை
அவனிடம் வந்து நிலைத்த
து. சிரித்துக் கொண்டே
"ஹலோ..." என்றாள்
திகைக்கிடந்த திரும்பினன்
ராஜா. அது புதிய அனுபவம்.
இந்த வயதுப் பெண்களோடு
அவன் பேசியதில்லை. பெண்க
ளுடன் பேசுவது என்பது
தப்பானது, ஒழுக்கமில்லாத
காரியமாய் இருந்து வந்தது


படிப்பகம்

அவளுக்கு. திரண்டு போய் வருவோர்..... என்றான். மீண்டும் அவளிடமிருந்து அதே சிரிப்பு. மனநிறைவை வெளிக்காட்டும் சிரிப்பு. இணைந்திருத்தை வரவேற்கும் சிரிப்பு.

கிறிஸ்டார் அவனைத் திருமணம் செய்ய விரும்பும் செய்தியை தேசவன் மேலும் அறிந்து கொண்டான் ராஜா. தமிழரின் பண்பாட்டை விரும்புபவர் அவள். தான் அவளைக் கலியாணம் செய்து கொள்ளத் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்த முடியாமல் ஒரு நோக்கு அவனைத் துளைத்துக் கொண்டிருந்தது. நாட்டுப்பற்றும், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற துடிப்பும் சேர்ந்து தான் அவனை அவளிடமிருந்து விலக்கிக் கொண்டிருந்தது. அவன் மேல் அவளுக்கு ஒரு வெறித்தனமான காதல். அவன் காதலித்த அளவு அவன் அவளை விரும்பவில்லை. சின்ன வயது பதியாக மணக்க ஆரம்பித்த போது அழகாயிருந்தது. கொள்ளிக் கட்டையாக அது அவளைப் பற்றிக் கொண்ட போது மனமும் வெறுமையாகியது.

கைக்கு செய்கையும்; வாய்க்கு ருசியையும்; வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தையும் உண்டாக்கிற வரை - அவன் உள்ளத்தில் கனாப் பூட்டுகிற இந்தச் சொந்தங்கள் அவள் நாளும் சேதமாகிப் போனபின்... பிற சிரிப்புகள் அவனுள் ஒலியடங்கி, நெகிழ்ந்து மடிந்து போயின.

இன்று நாட்டில் பிரச்சினைகள் தீர்ந்த சமாதானம் வந்துவிட்டது. நோர்மன் நாட்டிற் குடியி

www.padippakam.com

இந்த தமிழ்நாட்டின் தாயகம் இங்கே நாட்டை விட்டு
நோக்கிப் போகவேண்டிய வெளியேற வேண்டும். இநீ
அந்த நேரம் வந்துவிட்ட தினீ நாளும் அவன் கண்ட
தீ. இன்முகத்துடன் போக ஆசைகள் இன்று ஏதோ
ஒருவனின் மனமும் இடம் பெயர்ந்து மறந்தது. அவன்
தாயகம். மனிதனுக்கு கொட்டியம் ஒரு சிலருக்கே
வாழ்க்கையில் பணம் தன் அடங்கி மறந்தது. தன்னை
பதி பாதுகாப்பு. வறுமைக் பிரச்சினையை இழந்தான்.
கோட்டுக்கு மேலே வாழ் புயலில் அகப்பட்ட காற்று
தான் கூடப் போதாது. மாதின் எதிர்காலத்தைப் பற்
அடிப்படைத் தேவைக நிய கிலியில் உயிரைக்கை
ளைப் பூர்த்தி செய்து கொண் யில் பிடித்துக் கொண்டு
டு அதற்கும் மேலே சேமிப்பு உட்கொண்டு விட்டான்.
என்று கொஞ்சம் இருந்தா வெளியில் நின்று கொண்
ல் தான் நிம்மதியின்றி, மருங்கின்றனே தவறு உன்
வாழ்க்கை அர்த்தமுள்ள இங்கே எப்படி அழுகின்ற
தாக ஆக்க முடியும். என்ப என்பது கடவுளுக்கும் மனச்
தை அப்போது தான்... சாட்சிக்குமே தெரியும்.
உணர்ந்தவன், இன்று மனைவியை இன்று
இருப்பதற்கே தம்மால் கூப்பிட முடியாமல் ஈழ
த்தை விடுத்து நோக்கி பெற்ற பொன்னாட்டை மறந்
தோடினார்... ஒடுகின்றனர்... து இந்நாட்டுத் தந்தீபி
அன்று ராஜாவுக்கே பிள்ளையாகி விட்டான் என்
வந்த உள்ளுக்கு கடிதம், பதை அறிந்தான்.
இன்றைய் நாளை வாழ்வு நான் ஒரு ஜேர்மன்


படிப்பகம்

www.padippakam.com

பெண்ணை மனமார நேசிக் கின்றேன். நாங்கள் இரு வரும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்துள் ளோம். அவன் நம் ஜாதி யில்லை... குலமில்லை... சீத னம் இல்லை... எனக் கூறி மெளுநி விட்டிருக்கப் போட் டான்.

கிறிஸ்டா வீட்டை நோக்கிச் சென்றான். மனதுக் குள்ளே அவன் ஆசைப்பட் டதென்ன? ஆசைப்படா மல்.. நெரிந்தமாதிரியே.. காட்டிக் கொள்ளாமல்.. அவனுக்குப் பரிசளித்து விட் டான் அவன். இனி அவன் மற்றவர்களுடன் கூடி தியா யகம் போக வேண்டியதில் லை. என அவன் மனம் ஏற்றுக் கொள்வது அவனுக்கும் புரிகிறது.

கிறிஸ்டா... இது எனக்கு வந்த வினை. நான் உனக்கு மனசாரத் துரோகம் பண்ண மாட்டேன்' என்று உறுதி கூறியது அவன் மனம். பெற்ற பூமியையே மறந்து இன்னும் ஏன் எம்மினவர் தான் அந்நியவருவதையே நாடுகின்றனர். கிழிபடிப்பட் டவர்கள் தாயின் நாட்டிலு ம் அந்நியமாகத்தான் வாழப் போகிறார்களா?

அவளை விரும்பும், என் அவனை ஆளும் காதல் நேசமாகிவிட்டது ஜேர் மனி. அல்லது காதல் தேவதையாகிவிட்டதோ? இன்னும் அந்நியனிடம் அடிமையாக இருக்கவே மனம் நாடுகின்றது.

- முற்றும் -

இச்சஞ்சிகையில் வெளியா கும் கதைகளில் இடம் பெறும் பாத்திரங்கள் யாவும் கற்பனையே.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

* "தாய்" உலகத்தில் காணப்படும் ஒரே ஒரு புனிதமான படைப்பு. (கோல்ரிட்ஜ்)
* தாயின் அன்புக்கு ஒப்பாக இவ்வுலகத்தில் ஒன்றுமே இல்லை.
* அறிவு மிக்க தாயானவள் சாதிக்க முடியாதது ஒன்றுமே இல்லை.
* உதிரமதை உணவாகக் கொடுக்கும் பிறவி தாய். பிள்ளை பசி நீங்கிட தன் பசி மறப்பது தாய்.
* தாயிற் சிறந்த கோயிலும் இல்லை.
* ஒரு தாயால் பிள்ளைகளுக்கு தாயாகவும் தகப்பனாகவும் இருக்க முடியும். ஆனால் ஒரு தந்தையால் தாய் என்ற ஸ்தானத்தை வகிக்க முடியாது.

கடந்த இதழில் வெளியான குறுக்கெழுத்துப் போட்டி இல 7ல் சரியான விடை எழுதி அதிர்ஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுபவர்:

MR. K. THIYAGALINGAM.
BAUMER STR. 34
4793 BUREN.

பொது அறிவுப் போட்டி இலக்கம் 4ல் சரியான விடை எழுதிய அதிர்ஷ்டசாலி. செல்வன் - T. குமார்
GYMNASIAM STR. 129
7530 PFORZHEIM


படிப்பகம்

www.padippakam.com

# இனியதோர் வீணை

- வீணை தயாளன் -

இனியதோர் வீணையொன்று - அது
மீட்கின்ற நாதம்
கேட்கின்ற போதும்
இன்புறும் பல இதயம்

தாளமொரு ஜதியுடன்
தளிர்விரலின் நுனியாலே - பார்வையவர்
தட்டிவிட எழுந்துவரும் கீதமது
தரணிதனை மெய்சிலிர்க்க வைக்கும்.

சோகமது மனத்தினின்றும்
சொற்பனமாய் கலைந்துவிட மருந்தாகும்.
சுகமான ராகத்தின்
இதயமான ஒலிகயங்கள்.

இரும்பாக இருக்கின்ற இதயத்தை
கரும்பாக இனிக்க வைக்கும் வேதம்.
என் மனதினிலே எழுகின்ற வேகம்
அந்த நாதத்தில் லயித்துவிட்ட மோகம்.

www.padippakam.com

# 50 DM கூட அனுப்ப முடியவில்லையே

அன்பின் நண்பா!

நடந்த உனது கடிதத்தில் 50 DM அனுப்ப முடியவில்லையே என்றும், உனது பெற்றோர்கள் கடன்களில் மூழ்கியிருக்கிறார்கள், என்றும் எழுதியிருந்தாய். மேலும் இருந்து கட்ட பணம் 50 DM அனுப்ப முடியவில்லையே என்று எழுதுகிறாய். உண்மைதான். ஆனால் இப்போது பிரச்சினை தீர்ந்து விட்டது. ஒரு கிழியும் தேவையில்லை. இனி அகதிகளை நோடு வீட்டு துரத்தப் போகிறார்கள் என்றும் இங்கிருந்து ஆட்கள் போய் அதற்கான ஏற்பாடுகள் செய்யப் போகிறார்கள் என்றும் எனது நண்பன் ஒருவன் சொன்னான். அவன் தம்பிகள் கீட்டாரும் வீடு கட்ட ஆயத்தம் செய்கின்றனர் எனச் சொல்லிவிட்டு அவனும் இலங்கை போய்விட்டான்.

நாட்டுப் பிரச்சினை முடிந்தால் நல்லதேயில் எமது நாட்டுக்குப் போவதே எல்லோருக்கும் மகிழ்ச்சி. இப்போது உனக்கு work permit கிடைத்ததாக அறிந்தேன். எனவே பணத்தைச் செலவிடாது உழைத்துக் கொண்டு திரும்புவது தான் சிறப்பு. அங்கு போய் நாமும் எமது கூடி மண்களில் ஈ.பெறுவோம். பெற்றோர்க்கு 50 DM இனி அனுப்பாவிட்டாலும் பரவாயில்லை. உனது எதிர்காலத்தைத் திட்டமிட்டு அமைக்க வாய்த்த, உனக்காக வாழ்வது நல்லது பணத்துடன் நாட்டுக்குப் போ. இது தான் உனக்கு நண்பன் என்ற முறையில் கூறும் புத்திமதி....

இங்ஙனம்
- Kanth.



# சிறுவர் களஞ்சியம்

[redacted]

## - மானும் காகமும் -

செல்வன். வாகீசன் - திருச்செல்வம்

ஒரு காட்டிலே ஒரு மானும் காகமும் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. காகம் மரத்தின் அடியிலும் தங்களது மாலைப் பொழுதினைக் கழித்து வந்தன. அதிகாலையானதும் காகமும் மானும் உணவு தேடச் செல்வது வழக்கம்.

காலையில் உணவு தேடச் செல்வதும், மாலையில் தமது இருப்பிடத்தை நாடி வருவதும் பின் தம் உரையாடல்களைத் தொடர்வதுமாக தமது காலத்தைக் கழித்து வந்தன. மான் தனக்கு உணவு கிடைக்கக்கூடிய புற்தரை உள்ள இடங்களைப் பார்த்து வருமாறு கூற காகமும் அப்படியே செய்ய மானும் அந்த இடங்களுக்குச் சென்று தனது பசியாற உண்டு மாலையானதும் திரும்பி விடும்.


படிப்பகம்

www.padippakam.com

ஒரு நாள் ஒரு நரி இவர்களின் சிநேகத்தை நோக்கி வந்து அவர்களுடன் உரையாடியது. அப்போது அந்த நரிக்கு ஒரு கள்ள நோக்கம் ஏற்பட்டது. மான் நன்றாகக் கொழுத்திருப்பதைக் கண்டு, அதனுடைய இறைச்சியை உண்டு தன் பசியைப் போக்க வேண்டும் எனத் திட்டமிட்டது. அந்த நரி ஒவ்வொரு நாளும் இவர்களிடம் வந்து தனது உரையாடலைச் சிநேகமான முறையில் ஆரம்பிக்கும். ஒரு நாள் நரி மானைப் பார்த்து நண்பா! நான் இன்று தான் அதிக புல் உள்ள இடம் ஒன்று கண்டேன். அதில் நீ வயிறு நிறைய உண்ணலாம் என்று கூறியது. அதற்கு காகம் நண்பா! அது கமக்காரனின் தோட்டமாக இருக்கலாம். நீ அங்கு போனால் ஆபத்தாகி விடும் என்றது. அதற்கு மான் அப்படியிருக்காது என்று நரியின் பேச்சை நம்பிச் சென்றது.

நரியும் மானைக் கூட்டிச் சென்று நண்பா! இதோ தெரிகின்றது. நான் கூறிய இடம். நீ போய் உனது வயிறு நிறைய உட்கொண்டு வாரும், அதுவரைக்கும் நான் இங்கே இருக்கின்றேன் என்று கூறி ஓர் புதர் மறைவில் ஒளித்திருந்தது. அதன் அந்தக் கள்ள நோக்கம் என்னவென்றால், இது கமக்காரனின் தோட்டம். அவன் இங்கு வருவான். அப்போது இந்த மான் அவனுடைய கையில் அகப்பட்டுவிடும். இதற்குப் பின் அதன் உடலை நான் சந்தோசமாக உண்ணலாம் என்று சிந்தித்துக் கொண்டு புதர் மறைவில் ஒளித்துக் காத்துக் கொண்டிருந்தது.

கமக்காரனும் அங்கு வந்தான். அவன் தனது தோட்டத்தை மான் நாசமாக்கிவிட்டதே என்று கோபத்துடன்



படிப்பகம்

www.padippakam.com

மானை வலைவீசிப் பிடித்தான். மான் வலையிலிருந்து தப்ப முடியாமல் தவித்தது. வேடக்காரனும் வலையுடன் மானைப் பிடித்துக் கட்டி விட்டு தனது இருப்பிடம் சென்று விட்டான். மாலைப்போதாகியும் காகம் இருப்பிடத்துக்கு மான் வராமலேயே எண்ணிக் கவலை கொண்டது. காகம் விடிந்ததுடன் மானைத் தேடிப் பறந்தது. அது நரிப்பயலின் சூழ்ச்சியாகத் தான் இருக்க வேண்டும் என்க காகம் உணர்ந்தது. இரவு முழுவதும் நித்திரையின்றி வலையில் அகப்பட்டுக் கொண்டிருந்த மானைக் கண்டது. காகம் நண்பனுக்கு அருகே சென்று நடந்தவைகளை அறிந்தது. அப்போது காகம் மானை நோக்கி நண்பா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அப்படியே செய் என்றது. அதாவது வேடக்காரன் இங்கு வருவான். வரும்போது நீ இறந்தவன் போல் கண்களை மூடிக் கொண்டு படுத்துக்கொள். நானும் உனது கண்களைப் பொய்யாகக் கொத்துகிறேன். அப்போது அவன் நீ செத்துவிட்டாய் என எண்ணி வலையை அவிழ்த்து விடுவான். நீ தப்பி ஓடி விடு என்றது. அப்படியே வேடக்காரனும் வந்தான். காகமும் மானின் கண்களைக் கொத்திக் கொண்டிருந்தது. மான் இறந்து விட்டதென்று வேடக்காரன் நினைத்து வலையை அவிழ்த்து விட்டான். உடனே மான் தப்பியோடியது. திடீரென அவன் தனது கையில் இருந்த கட்டைத்தடியால் அம்மானைக்கு எறிந்தான். அத்தடி புதரின் மறைவில் ஒளிந்திருந்த நரியைப் பட்டு துடிதுடித்து இறந்தது. காகமும் மானும் அக்காட்டில் நண்பர்களாக வாழ்ந்தன.

பிள்ளைகளே! மற்றவர்க்கு கெடுதல் செய்ய நினைப்பவர் தாமே கேடடைவர்.


படிப்பகம்

www.padippakam.com

# உங்களுக்குத் தெரியுமா?

இருதிணை — உயர்திணை, அஃறிணை. — தி. வாசுகி —

இருமை — இம்மை, மறுமை

இருசுடர் — சூரியன், சந்திரன்

இருநிதி — சங்கநிதி, பதுமநிதி

இருவகைப் பற்று — அகப்பற்று, புறப்பற்று.

இருவகைப் பொருள் — கல்விப் பொருள், செல்வப் பொருள்.

இருமுதுகுரவர் — தாய், தந்தை

இருவினை — நல்வினை, தீவினை.

இருவகையறம் — இல்லறம், துறவறம்

இருமரபு — தாய் மரபு, தந்தை மரபு

முப்பொறி — வாக்கு, மனம், காயம்

முக்காலம் — இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

முத்தமிழ் — இயல், இசை, நாடகம்,

மூவரசர் — சேரன், சோழன், பாண்டியன்

முப்பிணி — வாதம், பித்தம், சிலேட்டுமம்.

மும்முரசு — வீரம், கொடை, மங்கலம்.

முச்சங்கம் — முதல், இடை, கடை,

மும்மலம் — ஆணவம், கன்மம், மாயை

நான்கு வேதம் — இருக்கு, சாமம், யசுர், அதர்வணம்,

நாற்குலம் — அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்,

www.padippakam.com

நானிலம் — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

நான்கு உறுதிப் பொருள் — அறம், பொருள், இன்பம், வீடு

நால்வகை ஆச்சிரமம் — பிரமச்சாரி, இல்வாழ்வோன்,
வானப்பிரஸ்தன், சந்நியாசி.

நால்வகைச் சொல் — பெயர், வினை, இடை, உரி

நால்வகைப் பூ — கொடிப்பூ, கோட்டுப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ

ஐம்பெருங்குரவர் — அரசன், குரு, தந்தை, தமையன், மூத்தோன்.

ஐம்பெரும்பூதங்கள் — நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.

ஐவகை இலக்கணம் — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

ஐம்பெருங்காப்பியங்கள் — சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம்
மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி

அறுவகைச்சுவை — கைப்பு, புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு,
உவர்ப்பு, கார்ப்பு

அறுவகைப் போகம் — பெண், போசனம், அணிகலன்
ஆடை, தாம்பூலம், பூவமளி.

அறுவகைப் பொழுது — கார், கூதிர், முன்பனி, பின்பனி,
இளவேனில், முதுவேனில்

எழுவள்ளல்கள் — பாரி, எழினி, நள்ளி, மலையன், பேகன்
ஆய் அண்டிரன்.

எழுதிணைகள் (அகத்திணை) கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை,
மருதம், நெய்தல், பெருந்திணை.

எட்டுத்தொகை — நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு,
அகநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு.


படிப்பகம்

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 7 ன் முடிவுகள்.

**இடமிருந்து வலம்**

1-7 மகாத்மாகாந்தி.

8-9. மாதி

11-14 மருதாணி

15-16, ஆசி

19-21, பதுசு

22-24, தனம்

25-28, திப்பம்

32-35, விரதம்

36-39, விராகன்

44-48, ஆபரணம்

50-54, பராதனம்

55-56, நடம்

**மேலிருந்து கீழ்**

1-36, மதுசூதனன்

2-16, காமாசி

4-32, மாணிக்கம்

5-33, அகோதரம்

6-27, பக்தி

7-14, மதி

21-28, தப்பு

30-51, நடாகம்

38-52, சாபம்

39-53, புரவி

41-55, ஆரம்

49-56, நடை.

## பொது அறிவுப் போட்டி 4ன் முடிவுகள்

1. நோபெல் அல்பிரட் 2. கிறிஸ்து பிறப்பதற்கு முன் - பிறந்த பின். (3). திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இலங்கையைச் சேர்ந்தவர். (4) மாது, மது, மாமிசம், சூது, களவு. (5) திருகோணமலை. (6) தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன். (7) கிருஷ்ணரால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. (8) ஐரோப்பிய நாட்டு மதச் சீர்திருத்த வாதி, பைபிளை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த் (9.) 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 14.9 மில்லியன். (10). மின் ஒளிவிளக்கையும், பேச்சைப் பதிவு செய்து, அதைத் திரும்ப ஒலிக்கச் செய்யும் கருவியையும் கண்டுபிடித்தார். ஒரே சமயத்தில் நான்கு செய்திகளை அனுப்பும் அமைப்பைக் கண்டுபிடித்தார்.

# நான் படித்துச் சுவைத்தவை



கண்ணீர் சிந்தும் பாறைகள் -

உலகில் கண்ணீர் சிந்தும் பாறைகளை எங்காவது காணமுடியுமா? சோவியத்தின் வடகிழக்கு சைபீரியாவில் யாகுத்ஸ்க் பிரதேசத்துக்கு அருகிலேயே அத்தகைய பாறைகளை எவரும் காண இயலும்.

லேனா நதியின் வலது கரை நெடுகிலும் 200கி.மீ. நீளத்துக்கு முரண்பட்ட விசித்திரமான, உயரமான செங்குத்துப் பாறைகள் அமைந்துள்ளன. அந்தப் பாறைகளின் கரடுமுரடான மேற்பகுதியிலிருந்து கண்ணீர் தாரைகள் போல் நீர்த்தாரைகள் வழிவதைக் காணலாம். மிக அதிகமான வெப்பநிலையிலும் அந்த நீர் தாரைகள் உலர்ந்துவிடுவதில்லை. தொடர்ந்து அந்தப் பாறைகள் கண்ணீர் வடித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்த அதிசயக் காட்சியினைக் கவரப்பட்ட சோவியத் விஞ்ஞானிகள் இதன் காரணத்தை ஆராய்ந்தார்கள். இந்த செங்குத்துப்பாறைகளின் பகுதிகளில் கனமான அடுக்குப்போல பாசி படர்ந்திருக்கிறது. இந்தப் பிரதேசத்தில் மிக அதிகமான வெப்பநிலையில் காற்று மண்டலத்தில்.

www.padippakam.com

ஒரு கன மீட்டருக்கு 10 கிராம் அளவுக்கு ஈரப்பதம் இருக்கிறது. இந்த வெப்பக்காற்று இந்தப் பகுதியை மூடிய பனி படர்ந்த பாறையின் மீது படும் போது அதிலுள்ள ஈரப்பதம் குளிர்ச்சியடைந்து நீர்த்துளிகள் ஏற்படுகின்றன. அந்த நீர்த்துளிகள் ஒன்று சேர்ந்த நீர்தாரைகள் ஏற்படுகின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பாறைகள் கண்ணீர் சிந்தும் விந்தை இதுதான்.

***

## தெரிந்து செய்வகை —

ஒருவன் ஒரு செயலை ஆரம்பிக்கு முன் அதனால் ஏற்படும் அழிவையும் அழிந்த பொருளின் பின் ஆவதையும், பின்பு கிடைக்கும் ஊதியத்தையும் முன்பே ஆராய்ந்து தெளிந்து செயலில் இறங்க வேண்டும். அதைச் செயற்படுத்தும் போது தேர்ந்தவர்களோடு செய்முறை ஆராய்ந்து தாமும் அதைப்பற்றி எண்ணிச் செய்பவர்களுக்கு கிட்டாத பொருள் ஒன்றும் இல்லை.

பின்பு கிடைக்கும் நன்மையைக் கருதி இப்போதுள்ள முதலை இழக்கும் தன்மையையுடைய செயலை அறிவுள்ளார் மேற்கொள்ளமாட்டார்கள். கெட்ட பெயர்தரும் குற்றங்களுக்கு பயப்படுகிறவர்கள் தாம் கண்டு தெளியாதவைகளை செய்ய மாட்டார்கள்.

ஒரு செயலின் முறைகளை நன்கு எண்ணி



படிப்பகம்

www.padippakam.com

முடிவு செய்யாமல் ஒன்றை ஆரம்பித்தல் பகைவருக்கு ஊக்கம் கொடுப்பதற் கேற்ற வழியாகும். ஒருவன் செய்ய வேண்டாத காரியத்தைச் செய்வதினால் கெட்டுப் போவான். செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாவிட்டாலும் கெட்டுப் போவான். இயலக் கூடிய செயலையும் அதன் வழிவகைகளையும் எண்ணித் துணிந்த பின்பே தொடங்க வேண்டும். தொடங்கிய பின் சிந்திப்போம் என்று இருத்தல் இழுக்கேயாகும். தகுந்த வகையில் செய்யப்படாத முயற்சிபல துணை நின்று காத்தாலும் காக்க முடியாது போகும்.

ஒவ்வொருவருடைய குணத்தையும் அறிந்து அதற்கேற்ற முறையில் செய்யாவிட்டால் நல்ல ஒன்றைச் செய்ய எத்தனித்தும் தவறு ஏற்படலாம். தம்முடைய தன்மைக்கு ஏற்ற முறையில் இல்லாதவற்றை உலகத்தோர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகையால் உலகம் வெறுத்துத் தள்ளாத காரியங்களை ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

ஆகையால் அவசரமாக ஒரு காரியத்தில் இறங்கி அதற்குப் பதிலாக பல வழியில் சிந்தித்து பின் அச்செயலைத் தொடங்கி முடிப்பதே சிறந்தது. திட்டம் போட்டு செயற்பட வேண்டும் என்பதாகும்.

தொகுப்பு → - TONY -

ஆதாரம் - வீரகேசரி -

# நடந்த நாடகங்களில்.....

ஒரு ஜோடிச் சிறகு
வேண்டுமென்றேன்
உன்னுடன்
உல்லாசமாய் பறப்பதற்கு

ஒரு ஜோடிச் சிறகு
வேண்டுமென்றேன்.
தூரப் பறந்து
உன்னை மறப்பதற்கு

எழுது, எழுது.
கடிதம் எழுது
என்னை
காதலிக்கின்றாய் என்றல்ல.
நீ
வேறு எவரையும்
காதலிக்கவில்லை.
என்று எழுது.

– ஜாபன் –

ஆதாரம் - "மேத்தாவின் [illegible]"

www.padippakam.com

# சமுதாயத்தின் சந்திப்பு

## தொடர் நாடகம்

— விக்ஞ —

## அங்கம் 7

சென்றதைச் சுருக்கம் — கார்த்திக் ஜேர்மனி வந்து சௌமியாவுடன் நட்புக் கொண்டு பழகி வரும் நாளில், உண்மையான காதலி மஞ்சு இலங்கையிலிருக்கின்றாள் என்பதையறிந்து அவ்வுறவைத் துண்டித்து விடுகிறாள் சௌமியா. வீட்டில் பெற்றோரின் தூண்டுதலினாலும், கொடுமையினாலும், கார்த்திக்கின் (ஜேர்மனி வாழ்) நண்பனை தெரிந்த் திருமணம் செய்கிறாள் மஞ்சு. சௌமியாவையும், மஞ்சுவையும் இழந்த கார்த்திக் உலக வாழ்வை வெறுக்கின்றான். பின்னர் தான் செய்த பாவங்களுக்கு, பிராயச்சித்தம் தேடுவதற்காக கிறிஸ்தவச் சபைகளொன்றில் சேர்ந்து சேவைத் தொண்டு செய்து வரும் போது சபீனா என்ற ஜேர்மனிய பெண்ணைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.. முடிவு? ... தொடர்கிறது.....

சபீனா — உண்மை தான். வாழ்வதற்கு ஒரு துணையையும் தேடிக் கொண்டு, வாழவேண்டும் என விரும்பி எனது


படிப்பகம்

www.padippakam.com

ஆராய்ச்சிக்கு உதவியாளராக இருந்த இந்திரா என்ற
ஜெயராமனின் விரும்பி திருமணம் செய்து கொண்டேன்.

கார்த்திக் - சம்பிரதாயங்கள் பலவழிகளில், பல இடங்களில்
எங்கு சிதறுகின்றன.

சுபத்ரா - என்ன சொல்கிறீர்கள்?

கார்த்திக் - இல்லை.. இந்தியக்கலாச்சாரத்துடன் இணைந்து 1½
வருடங்கள் இல்லற வாழ்க்கை வாழ்ந்துள்ளீர்கள்.

சுபத்ரா - ஓ.. சந்தோஷமாக வாழ்ந்தேன். தொடர்ந்தும் வாழ
விரும்பினேன். அதாவது இந்தியக்கலாச்சாரம், பெண்களின்
வாழ்க்கைமுறை எனக்கு நன்கு பிடித்துக் கொண்டது. ஆனால்
அது கைகூடாமல் போய்விட்டது. அதை எண்ணும் போது
கவலைதான்.

கார்த்திக் - உங்கள் வாழ்க்கை ஏன் அப்படி இடைநடுவில்
அறுந்துவிட்டது. காரணம் கேட்கின்றேன் என கோவிக்க
வேண்டாம்.

சுபத்ரா - காரணத்தின் விளைவில் எனக்கு ஆட்சேபனை இல்லை.
இக்காலம் போனது. சந்தோஷமாகவே ஆறுதல் பெற
விரும்புகின்றேன்.

கார்த்திக் - நான் சந்தோஷமாக வாழ்ந்திருப்பீர்கள் என நினைக்கின்
றேன்.

சுபத்ரா - 1½ வருடம் காலம் எப்படி போனதென்று தெரியாது.
இல்வாழ்க்கையில் எமது இன்பவாழ்க்கையில்
லக்ஷ்மி என்ற பெண் குறுக்கிட்டாள். அதன் பின் எனது
கணவருக்கும் அப்பெண்ணுக்கும் தொடர்பு வளர்ந்து தொடங்
கியது... (என அழத் தொடங்குதல்)


படிப்பகம்

www.padippakam.com

கார்த்திக் - போதும்.. அழவேண்டாம்.. சொல்லவேண்டாம் நிறுத்திவிடுங்கள்..

சபீதா... இப்படியிருப்பேன்... எனது கணவரும் - மச்சாளியும் தனி அறையில் இருந்ததை நான் கண்டுவிட்டேன். இன்று முதல் எனது கணவருடன் வாழ எனக்குப் பிடிக்கவில்லை. அன்றுடன் என் வாழ்வு கசந்துவிட்டது.

கார்த்திக் - நீங்கள் இந்தியப் பெண்ணை வாழவரும் அந்தக் கலாச்சாரத்துடன் இணைந்து வாழ வெறுத்திருந்தீர்கள் பெறுமதி போய்விட்டது. உங்கள் கதையைக் கேட்க வேதனையாயுள்ளது.

சபீதா — வேதனையும் சோதனையும் நிறைந்தது தான் உலகம் உலகம். உலகமே பொய்மை தான்.

கார்த்திக் — நீங்கள் இந்தியக் கலாச்சாரப்படி வாழவிரும்பினீர்கள். ஏமாந்தும் தான். நான் ஒரு பெண்ணை இலங்கைக் கலாச்சாரப்படி மாற்றவென்றேன் எனக்கும் ஏமாற்றம் தான்.

சபீதா — என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்கு ஏமாற்றமா? என்ன?

கார்த்திக் - ஆம். நான் ஒரு ஜேர்மனிய பெண்ணை காதலித்து திருமணம் செய்ய இருந்தேன். இரண்டு காலம் நன்றாகப் பழகினோம்.

சபீதா - பின்பு என்ன நடந்தது?

கார்த்திக் — எமது நாட்டுக் கலாச்சாரப்படி வாழவந்தவள், எமது நாட்டு பெண்போல் வாழவும் பழகினாள். இன்னும் எனக்கு ஒரு காதலி இலங்கையில் இருக்கின்றாள் என அறிந்து என்னைவிட்டு விட்டாள்... இலங்கையில் எனக்கு இருவயது, தெரியாது கிழவி தான். அவளைப் பெரிய பக்தி அக்கறை விட்டாள் (பொய்யுரைத்தல்)

சபீதா — பின்பு அவளைச் சந்தித்து உண்மையைக் கூறலாமே?



படிப்பகம்

www.padippakam.com

கார்த்திக் — சுதாகரன் என்பதுதான் அவருடைய பெயராம்
ஒரு நாள் போனேன். அந்த வாட்டசாட்டமான
ஒரு அமெரிக்க வாலிபருடன் இருப்பதைக் கண்டேன்.
இதன் பின்னர் நான் விலகிக் கொண்டேன்.

சபீதா — இவரின் கதைகளுக்கும் ஒரு இரு பெண்ணின் கதைக்கு
ஈது அதுவும் தொடர்கதையாகவே இருக்கின்றது.

கார்த்திக் — உங்களைச் சந்தித்த பின்பும் இச்சேவையில் சேர்ந்த பின்
பும் எனக்கு ஒரு ஆறுதல் ஏற்பட்டுள்ளது.

சபீதா — தொடர்கதையை இனியும் தொடராமல் நாம் இரு
வரும் சேர்ந்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்தால் என்ன?

கார்த்தி — என்ன சொல்கிறீர்கள்? எனக்கு விளங்கவில்லை..
முற்றுப்புள்ளி வைப்பதா?

சபீதா — கார்த்திக் உங்களைச் சந்தித்த நாளில் இருந்து என்
னையறியாமலேயே உங்களில் ஏதோ ஒன்று கொள்ளை கொண்டுவிட்
டது.

கார்த்திக் — எனக்கும் தான்.

சபீதா — அப்படியா? நான் எப்படிச் சொல்வதென்று இருந்தேன்!

கார்த்திக் — என்ன? அப்படிப் பார்க்கிறீர்கள்? ....

சபீதா — கார்த்திக்! எனக்கு இந்தியக் கலாச்சாரம் என்றால்
என்ன? இலங்கைக் கலாச்சாரம் என்றால் என்ன?
கீழைத்தேயக் கலாச்சாரம் ரொம்பப் பிடிக்கும். இனி
யுடன் நாட்டு வாழ்க்கையைத் தொடர விரும்புகிறேன்.

கார்த்திக் — சபீதா! நீ என்ன சொல்கிறீர்?

சபீதா — நாம் இருவரும் இச்சேவையில் ஈடுபட்டுக் கொண்டு,
கொஞ்சக்காலம் இந்நாட்டு ஆட்களுக்கு சேவையாற்



படிப்பகம்

'திருமணம் செய்து கொண்டாள் என்ன? என யோசிக்கின்றேன் காந்தி!

காந்தி - என்ன கலியாணமா?

ரமேஷ் -- ஏன்? இந்த நேரத்தில் கலியாணம் செய்யலாம் தானே.

காந்தி - நீங்கள் நினைப்பது போல் நான் அந்த மனநிலையில் இல்லை. எல்லாம் வெறுத்த விரக்தியான நிலையில் வாழ்கின்றேன். அது புத்தியின் பெருந்.... ரமேஷ்!

ரமேஷ் - நானும் ஒரு பெண்தானே. உங்கள் கலாச்சாரப் படி ஒரு ஏழைப் பெண்ணுக்கு ஒரு ஆண்மகன் வாழ்வு கொடுத்தால் அது புண்ணியமாமே! அப்படி பார்த்தால் நானும் ஒரு ஏழை. அதிலும் காதல் ஏழை. நான் இன்னமும் யாரையும் மறுமணம் செய்து கொள்ள மாட்டேன். இப்போது ஒரு தாசி போல் உம்மைத் திருமணம் செய்ய வேண்டும் என் ஆசை என் மனதில் அரும்பியுள்ளது. அதற்கு நீ இணங்கப் படாவிட்டால் இதோ அனைய பௌசுக்கிய நிர்வாணியாகிவிடுவேன்.. என ஆவேசம் கலந்த தொனியில் கூறுகிறாள்.

காந்தி - என்ன ரமேஷ்! (தன் மனதில்.. எனக்கென வாராவிட்டாலும்.. என்னை வெளிக்கு ஒரு புதுமைச்சி வந்தாலும் என்றால் என் ஒப்படிவாதத்தை விட்டுக் கொடுக்கக் கூடாது? என் மனச்சாட்சிக்கு செய்யும் பிரதியுபகாரமாக இது செய்தால் என்ன?..) யோசித்து விட்டு.. என்ன இருந்தாலும் நாம் மனித பிறவிகள் தான் இதயத் தாகத்தை விட முடியாது. [மனம் மாற்றமடைகின்றான்]

www.padippakam.com

சபீதா – ஏன் யோசிக்கிறீர்கள்?

கார்த்தி – உங்கள் பிடிவாதமும் ஒரு ஆணை இங்கிருந்து கொண்டு போராடுகின்றதா? என்றான்...

சபீதா – கார்த்திக் தேவியின் மௌனங்களும்...

கார்த்திக் – சபீ! அன்பு என்பது கணவன்–மனைவிக்கு மட்டும் அல்ல. தாய்–பிள்ளை, சகோதரன்–சகோதரி.. என்ற உறவுகளுக்கும் உண்டு தானே...

சபீதா – மனம் சோர்ந்தவளாய்.. எனக்கு விதி இல்லையா தான் என நினைத்துக் கொண்டே... உங்கள் மனைவியைப் பொறுத்தது என்கிறீர்.

கார்த்திக் – நீ சொல்வதும் சரிதான்... ஏதோ பிறந்து விட்டோம். வாழவேண்டும் தானே.. எங்க கூட நீ எனது இருந்தாச் சொல்லி வைக்க முடியும். (உன்னை மனம் விரும்புகிறேன் என்பதால்)

சபீதா – நமது வாழ்க்கையை இந்த ஆதரவற்ற மக்களுக்கு அர்ப்பணிப்போம்.. அதுதானே சொல்லப் போகிறீர்கள்.

கார்த்திக் – வார்த்தையை விழுங்கிக் கொண்டு இம். என்று. தனது விருப்பத்தை தானும் விழுங்கிக் கொண்டான்...

சபீதா – நாம் அதிக நேரம் கழித்துவிட்டோம். எல்லோரையும் மறந்து விடுங்கள் எனக் கூறிவிட்டு சேவைக்கு தயாராகுங்கள்.

இரவும் நெருங்கியதால் சபீதா செல்வி வந்ததோடு கார்த்திக்கை அழைத்தது ஒரு காட்சி...



படிப்பகம்

www.padippakam.com



காவ்யா தனது கணவரான அமெரிக்கருடன் குழந்தைகளையும் கையிற் பிடித்தபடி விருந்தினரைச் சந்தித்து வெளியேறுகின்றாள்.

காவ்யா – எந்த வித முகவேறுபாடோ, மனமாற்றமோ இன்றி சர்வசாதாரணமாக ஹலோ! கார்த்திக் How are you? என்றாள்.

கார்த்திக் – நானும் பதட்டப்படாமல் Fine Thanks.. என்றேன்.

சபீனா – யார் அந்த பெண். உங்களுக்குத் தெரியுமா?

கார்த்திக் – ஓ நன்றாகத் தெரியும்... தெரியாமல் இருக்க நியாயம் இல்லையே...

சபீனா – ஏன்..

கார்த்திக் – எனது டௌன் ஸ்கூலில் அவளும் படித்துக் கொண்டிருந்தாள்... இன்று அந்தப் பார்ட்டியில் பார்த்த.. அது தான் என்றன்.. சந்தர்ப்பம்....

சபீனா – சரி.. எங்களுக்குரிய வான் வந்துவிட்டது ஏறுவோம்.. இருவரும் வானில் ஏறிக் கொள்கின்றனர்.

* காட்சி முடிவு பெறுகிறது *

வாசகர்களே! தற்போது ஏற்பட்டுள்ள காலநேர அவகாசங்களுக்கு, ஏற்ற முறையில் இந்நாடகம் சுருக்கப்பட்டு முற்றுப்பெறுகின்றது. நாடகம் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை எழுதியனுப்பினால் எமக்கு உற்சாகமாயிருக்கும்.

xxxxx.

 படிப்பகம்

www.padippakam.com

# பாதி உறவு

மானிட வாழ்க்கை எனும் நூலின் முதல் அத்தியாயம் தான் குழந்தைப் பருவம் ஆகும். குழந்தைவளர்ப்பு என்பது ஒரு திட்டமிட்ட, பயிற்சி திறமானதோர் செயற்பாடாகும். ஒழுங்கான முறையில் குழந்தையை உருவாக்கினால்தான் ஒழுங்கான சமுதாயம் உருவாகும்.

இன்றைய தலைவர்கள் யாவரும் குழந்தைகளாக இருந்தவர்கள் தான். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். குழந்தைவளர்ப்பின் போது உடலையும் உளத்தையும் பக்குவமாக வளர்த்தல் வேண்டும். குழந்தை தானே.. அது ஒரு அ..றிணைப் பொருள் என்று நினைத்து வாழ்ந்தால் அது எதிர்காலத்தில் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும், ஏன் தமக்கும் பாரதூரமான விளைவை உண்டாக்கும் என்பதை "பாதி உறவு" எனும் குறுநாவல் வெளிப்படுத்துகின்றது.

ஆசிரியர் பார்த்திபன் ஆண்டில் இளையோராக இருந்த போதிலும் குழந்தைவளர்ப்பு, அதன் தன்மைகள், விளைவுகள் என்பவற்றை, குழந்தை வளர்ப்புக் கலையில் முதிர்ச்சி பெற்றவர் போல் கதையோட்டத்தைக் கொண்டு செல்லும் பாணி போற்றுதற்குரியது.



படிப்பகம்

www.padippakam.com

குழந்தைகளிற் கவனக்குறைவான பெற்றோர்கள் செய்யும் பாரிய தவறு உணவு, உடை, சுகாதாரம் என்பவற்றை அளிப்பதில் மட்டும் நின்றுவிடுகிறார்கள். குழந்தைகளின் இயல்பறிந்து அவர்களது உளக்கிளர்ச்சிகளை அறிந்து, மதிப்பளித்து, அன்புடன் அணைத்து வளர்க்காவிட்டால் அக்குழந்தைகளின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதன் ஒரு சில வரிகளில் பாதியுறவு படம் பிடித்துக் காட்டுகின்றது.

பிள்ளைகளை முறை தவறாது வளர்க்க வேண்டும் என்ற ஆசிரியரின் கதைக் கரு பல பாத்திரங்களினூடாக இழையோடிச் செல்கின்றது. கதை சொல்லும் பாணி, கையாண்டுள்ள கருப்பொருள், இந்நாவலுக்கு மெருகூட்டுகின்றது. பாதியளவிலான உறவுச் சிக்கல் மகாலிங்கம் - கனகேஸ்வரி பாத்திரங்களில் ஆரம்பித்து ராஜேந்திரன் - நந்தினி பாத்திரங்களின் மேலும் நாவலின் இறுதியில் பாதியுறவுக்கான காரணத்தை நோக்காக சொல்லப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாகக் கூறப் போனால் அழகுற அமைந்த வண்ண அட்டையோடு, ஒரு படைப்பினை வெளிப்படுத்தியுள்ளது எனலாம். இந்நாவலில் சில குறைகள் இருக்கலாம். அதுபற்றி விமர்சிக்க இது நேரம் அல்ல.

சொந்த நாட்டில் இருந்து கொண்டு சொந்த மண்வாசனையில், சிந்தனைத்தேனை பவனிவரச் செய்து கதைகள், நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள், என்பன


படிப்பகம்

www.padippakam.com



PHOTO COPIES ARE FREELY DONE BY

CARITAS

OF

DORTMUND AND LÜNEN

படிப்பகம்